பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 13 சனிக்கிழமை (28-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:32

## புலிகளின் ஒலிபரப்பு சாதனங்களால் நாட்டுக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை

### சட்டரீதியாகவே பெற்றார்கள் என அரசு விளக்கம்

கொழும்பு,டிசெ.28

வன்னியில் புலிகள் எவ்.எம். ஒலிபரப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் தொடர்பாக அரச தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

1966ஆம் ஆண்டு 37ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அரச சமாதான செயலகத்தினால் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்துக்கு ஒலிபரப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான அனுமதிப் பத்திரம் கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி வழங்கப்பட்டது. இந்த ஒலிபரப்பு நிலையத்தை நடத்தும் போது அந்தச் சட்ட மூலத்தில் கூறப்பட்

(2ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய ராணுவச் சிப்பாய்க்கு விளக்கமறியல்

### கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவு

கிளிநொச்சி,டிசெ.28

மணலாறில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதத்துடன் ஊடுருவினார் என்று கூறப்படும் சிப்பாயை விளக்கமறியலில் வைக்கும்படி கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மணலாறு 123ஆவது படையணியைச் சேர்ந்த எச்.எஸ்.நிமால் குமார (வயது 26) என்ற சிப்பாய் ஆயுதங்களுடன் கடந்த 24ஆம் திகதி விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரைக் கைது செய்த தமிழீழ காவல்துறையினர் தமிழீழ குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தி

(2ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் முயற்சி!

## ஆட்சேபிக்கின்றார் அன்ரன் பாலசிங்கம்



லண்டன்,டிசெம்பர்28

**ஸ்ரீலங்கா இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்களை அதன் பாதுகாப்பு என்ற அடிப்படையில் கண்காணிப்புக்குழு நியாயப்படுத்துவதை நிராகரித்திருக்கின்றது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.**

**கண்காணிப்புக் குழுவின் இந்தத் தீர்மானம், பொது உடைமைகளைச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருக்கும இலங்கை இராணுவத்தின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றும் புலிகள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.**

கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட்றூவ்ஹொவ்டேயினால் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக புலிகளின் தத்துவாசிரியரும் பேச்சுக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் கருத்து வெளியிட்டார்.

இந்த அறிக்கை கடித வடிவில் புலிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

"படைகளின் சமநிலை என்ற கோட்பாட்டில் அமைந்த - முற்றிலும் இராணுவத்தனமான - தங்களின் வாதம், இடம்பெயர்ந்த மக்களின் பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினையை அற்பமானதாக்கி முற்றிலும் புறக்கணித்திருக்கிறது." - என்றார் பாலசிங்கம்.

இராணுவம் நிலை கொண்டுள்ள பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதற்கு முன்னர் புலிகளிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று இராணுவம் வற்புறுத்துகின்றது. "இது சமாதான நடவடிக்கைகள் மீதான எமது

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிராகரிப்புக் குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்துகிறார்

### செயலக ஊடகப் பணிப்பாளர் தகவல்

கொழும்பு,டிசெ.28

உயர் பாதுகாப்பு வலயங்களில் கெடுபிடிகளைத் தளர்த்துவதற்கு புலிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்று பாதுகாப்பு படையினர் விதித்திருக்கும் நிபந்தனையை புலிகள் நிராகரித்திருப்பது குறித்து ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்தியிருக்கிறார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

இதுதொடர்பான விடுதலைப் புலிகளின் அறிவிப்பு குறித்தும் அதனால் எழக்கூடிய நிலைமைகள் குறித்தும் ஜனாதிபதி சகல விவரங் களையும் பெற்றிருக்கிறார். படைத் தரப்பின் நிபந்தனையைப்புலிகள் நிராகரித்திருப்பதால் எழக்கூடிய நிலைமைகளுக்கு முகம்கொடுக்க எடுக்கப்பட வேண்டிய மாற்று வழிகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருக்கின்றார் எனவும் ஜனாதிபதி செயலக ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தற்பொழுது கொழும்புக்கு வெளியே சென்றிருக்கிறார். அவர் கொழும்புக்குத் திரும் பியதும் இதுகுறித்து விரிவாக ஆராய்ந்து அரசுக்கு சிபாரிசுகளைத் தெரிவிப்பார் எனவும் பீரிஸ் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## உரும்பிராய் கிணற்றில் சிறுமியின் சடலம்!

யாழ்ப்பாணம்,டிசெ.28

உரும்பிராய்ப்பகுதிக் கிணறு ஒன்றினுள் இருந்து 8 வயது மதிக்கத்தக்க சிறுமியின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

நேற்று மாலை 6 மணியளவில் சிறுமியின் சடலம் கிணற்றுள் மிதப்பதை சிலர் கண்டனர். இது குறித்து பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதனை அடுத்து ஸ்தலத்துக்குச் சென்ற பொலீஸார் சிறுமியின் உடலை மீட்டனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட மாவட்ட நீதிவான் ரி. விக்கினராஜா மரணவிசாரணைக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-12)

## முன்னாள் பிரதமர் ரத்னசிறியிடம் இரண்டு மணிநேரமாக விசாரணை

கொழும்பு,டிசெ.28

முன்னாள் பிரதமரும் தோட்டத் தொழில் அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வு பொலீஸாரால் இரண்டு மணி நேரமாக விசாரணை செய்யப்பட்டார்.

ரப்பர் ஏற்றுமதி உற்பத்தி கூட்டுத் தாபனத்தில் நடைபெறவிருப்பதாகக் கூறப்படும் நிதி ஊழல் சம்பந்தமாகவே அவர் விசாரணை செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்திலுள்ள விக்கிரமநாயக்காவின் அறையிலேயே பொலீஸார் விசாரணை நடத்தி வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்திருக்கின்றனர்.

இவ்விசாரணைக்கென விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஊழல் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரான சரத் விக்கிரமசிங்க, கணக்காளர் வி.ஜி.தெல்துவ, தொழிற்சாலை முகாமையாளர் உபுல் நந்தமுனசிங்க ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். (ஐ)

## 'கடலோரக்காற்று' வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.28

கடற்புலிகளின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு வெளியீடாக நிதர்சனம் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள ந.கேசவராஜனின் 'கடலோரக்காற்று' முழுநீளத் திரைப்படத்தின் குடாநாட்டு வெளியீடு எதிர் வரும் 31ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இத்திரைப்படத்தின் வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையை அடுத்து படக்காட்சியும் இடம்பெறும்.

அதேதினம் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் இப்படம் வெளியிட்டு வைக்கப்படும். (ஒ-3)

யாழ்.ஆஸ்பத்திரி பதிவேடுகளில் திடுக்கிடும் தகவல்

## இம்மாதம் 20ஆயிரம் பேர் காய்ச்சலுக்குச் சிகிச்சை!

### ஏழாவது நபர் நேற்று மரணம்!!

யாழ்ப்பாணம்,டிசெ.28

வைரஸ் காய்ச்சல் என்று மருத்துவ வட்டாரங்களில் கூறப்படும் ஒரு வகைக் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து செல்கிறது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் குடாநாட்டில் ஆங்காங்கே சில இடங்களில் ஒரு சிலரைப் பீடித்த இந்தக் காய்ச்சல் இம்மாதம் எங்கும் பரவி நூற்றுக்கணக்கானோரை தொற்றியிருக்கிறது.

மருத்துவப் பதிவேடுகளின் படி இந்தக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஆயிரத்து 47 பேர் இம்மாதம் (நேற்றுவரை) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இம்மாதத்தில் ஆஸ்பத்திரி வெளி

(2ஆம் பக்கம் பார்க்க)

வருடம் முடிய சில நாள்களே உள்ளன

## இறுதிக் காலாண்டுக்கான மருந்து வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் மத்திய மருந்தகத்திற்கு இவ்வருட இறுதிக் காலாண்டுக்கான மருந்து வகைகள் இன்னமும் வந்து சேரவில்லை. இதனால் குடாநாட்டு வைத்தியசாலைகளில் சகல மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய பனடோலில் இருந்து காய்ச்சல், இரத்த அழுத்தம், மனநோய் ஆகியவற்றிற்கான மருந்து வகைகள் வரை அனைத்துமே பெரும்பாலும் முற்றாக முடிவடைந்த நிலையில் நோயாளர்கள் பெரும் அவலங்களைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் வருகை ரத்து!

யாழ்ப்பாணம்,டிசெ.28

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150ஆவது நிறைவுதின விழாவில் பங்குகேற்பதற்காக இன்று வருகைதரவிருந்த மனிதவள அபிவிருத்தி, கல்வி, கலாசார விவகார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவின் விஜயம் தற்போதைய காலநிலை காரணமாக ரத்துச்செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## 'குளோனிங்' குழந்தை பிறந்தது!

மியாமி,டிசெ.28

'குளோனிங்' முறையிலான முதலாவது குழந்தை பிறந்திருக்கிறது என்று பிரெஞ்சு விஞ்ஞானியும் ரயேலியன் மதப்பிரிவின் ஓர் உறுப்பினருமான பிரிஜிட் பொய்செலியர் என்பவர் அறிவித்திருக்கிறார்.

'குளோனிங் முறையில் மனிதனைப் படைக்கும் சங்கத்தின் தலைவரான அவர், அப்பெண்குழந்தை 'சிசேரியன்' பிரிவில் கடந்த வியாழனன்று பிரசவிக்கப்பட்டது எனத் தெரிவித்திருக்கிறார்.

மனித உடலில் இருந்து பெறப்படும் ஓர் இழையத்தைக் கொண்டு கருவை உற்பத்தி செய்வதே 'குளோனிங்' முறையாகும். இம்முறையைப் பயன்படுத்தி ஏற்கனவே ஆடு, மாடு போன்றவை உருவாக்கப்பட்டிருக்கின்றன.

உண்மையிலேயே 'குளோனிங்' முறையில்தான் இக்குழந்தை உருவாக்கப்பட்டதா என்பது சுயாதீனமான விஞ்ஞான தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. (ஒ)

*(விவரமான செய்தி 3 ஆம் பக்கத்தில்)*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின்

# நீதி, நிர்வாகம், சட்டம் - ஒழுங்கில் விடுதலைப் புலிகள் தலையிடலாமா?

## அமைச்சர் ஹக்கீம் அம்பாறையில் போர்க்கொடி தாய்லாந்துப் பேச்சில் முடிவுகாண வற்புறுத்து

காரைதீவு,டிசெம்பர்.28

**அரசியல் பணிகளுக்காக புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வர புரிந்துணர்வு உடன்படிக்கை அனுமதியளிக்கிறது. அரசியல் பணிகளுக்காக வந்த புலிகள் அரசின் நீதி, நிர்வாகம், சட்டம் - ஒழுங்கு ஆகியவற்றில் தலையிடலாமா? இப்படி அம்பாறையில் குரல் எழுப்பினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.**

இன்னும் ஒரு வாரத்தில் 2003 ஜனவரி 06 முதல் 09 வரை தாய்லாந்தில் நான்காவது சுற்று அரச - புலிகள் பேச்சு நடைபெற இருக்கிறது. அப்போது இந்த விடயம் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு காணப்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஹக்கம் வலியுறுத்தினார்

பேச்சுக்களில் கலந்துகொள்ளும் அரச குழு உறுப்பினர்களில் அமைச்சர் ஹக்கீமும் ஒருவர் என்பது தெரிந்ததே.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அம்பாறைச் செயலகத்தில் அரச தகவல் திணைக்கள அடையாள அட்டைகள் நேற்றுக் காலை வழங்கப்பட்டன. அந்த வைபவத்தில் பேசும்போதே, அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் தொடர்பாடல் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கர் மாக்கார், சுகாதார நலனோன்புத் துறை அமைச்சர் பி.தயாரட்னா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ. அன்வர் இஸ்மாயில், அ.சந்திரநேரு, ஊடக அமைச்சின் செயலாளர் குமார் அபேசிங்க, பிரதமரின் கொள்கைத் திட்ட ஆலோசகர் அலிசாஹிர் மௌலானா ஆகியோர் வைபவத்தில் கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எல்.எஸ்.பி.சிறிவர்த்தனா வரவேற்புரை நிகழ்த்தினார். அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

"இன்று பாரிய அரசியல் நெருக்கடிக்குள் முஸ்லிம் தலைமைத்துவமும் முஸ்லிம்களும் சிக்கிக்கொண்டுள்ளார்கள் அது பற்றி இங்கு பேசி விடயத்தை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை.

ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளியிடும்போது நடுநிலை தவறக் கூடாது உண்மைச் செய்திகளை உண்மையாக எழுதவேண்டும். அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை ஜன. 6 - 9 வரை நடைபெறவுள்ளது. அதில் புலிகள், அரச நிர்வாகத்தில் தலையிடுவது பற்றி பேசவுள்ளோம். ஒரு முடிவு கண்டு ஆகவேண்டும்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசும், புலிகளும், நோர்வே அரசும் விழிப்பாக செயற்படவேண்டும். எந்த இனமும் பாதிப்படையக் கூடாது. அரசியலின் பெயரால் கிழக்கைக் குழப்ப புலிகள் முனையக்கூடாது. இதனைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு நோர்வே அரசுக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் உண்டு.

கிழக்கு குழப்பப்படுமானால், கிழக்கின் நிலைமை மிகவும் மோசமடையும்.

- இப்படி ரவூப் ஹக்கீம் கூறினார்.

## கல்வியங்காடு வர்த்தகர் மீது 'தீனா குறூப்' தாக்குதல்!

நல்லூர்,டிசெ.28

'தீனா குறூப்' என்று தம்மை கூறிக்கொண்ட இளைஞர் குழு ஒன்று கல்வியங்காட்டில் உள்ள தேநீர்க் கடை உரிமையாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியது.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த பத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொண்ட குழுவே தம்மை 'தீனா குறூப்' எனக் கூறிக்கொண்டு தேநீர்க் கடை உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியது. எனினும் தேநீர்க்கடை உரிமையாளரும் அப்பகுதி இளைஞர்கள் சிலரும் காட்டிய எதிர்ப்பினாலும் அவ்விடத்திற்கு அண்மையில் கடமையிலீடுபட்டிருந்த பொலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்ததையடுத்தும் தாக்குதல் நடத்திய இளைஞர் குழு தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

## மத்திய கிழக்கு பணம்; அமைச்சு நடவடிக்கை

சவூதிஅரேபியா, குவைத், கட்டார் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் சம்பாதிக்கும் பணம் முழுமையாக இலங்கைக்கு வந்தடைய வேலை வாய்ப்பு, தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க, வளைகுடா அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இதேவேளை, வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களுக்கென இலவச சட்ட உதவி, இலவச மருத்துவ உதவிகளை ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சவூதி, குவைத் போன்ற நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களுக்கு இலவச சீருடைகளையும் உடைகளுக்கான பைகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செய்தியாளர் இ.தவராஜன் தெரிவித்துள்ளார்.

(ஒ)

## 'லைசென்ஸ்' இன்றி வாகனமோட்டிய பொலீஸ் சார்ஜன்ட் கைதானார்

புத்தளம்,டிசெ.28

வாகனசாரதி அனுமதிப் பத்திரமின்றி முச்சக்கர வண்டியை (ஓட்டோ) செலுத்திய புத்தளம் பொலீஸ் நிலைய சார்ஜன்ட் ஒருவர், நகர வீதிப் பாதுகாப்புப் பகுதி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதுகுறித்து தகவல் தந்த புத்தளம் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.இந்திரன், இவ்விடயத்தில் நீதியுடன் செயற்படுகின்றோம் என்றார்.

கைதுசெய்யப்பட்ட சார்ஜன்ட் புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## வவுனியாவில் கொள்ளை!

வவுனியா,டிசெ.28

வவுனியா கந்தசுவாமி கோயில் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்று நேற்றுமுன்தினம் இரவு கொள்ளையிடப்பட்டுள்ளது.

வவுனியா பொலீஸ்நிலையத்துக்கு சமீபமாக அமைந்திருந்த இந்த நகைக்கடைக்கு அருகில் உள்ள உயர்ந்த மரம் ஒன்றின் ஊடாகவே கொள்ளையர்கள் கடைக்குள் புகுந்ததாக நம்பப்படுகிறது.

இதில் 55லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மூன்று லட்சம் ரூபா ரொக்கமும் அபகரிக்கப்பட்டுள்ளதாக பொலீஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-3)

## புலிகளின் ஒலிபரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள ஏற்பாடுகள், நிபந்தனைகள் என்பன பேணப்படல் வேண்டும்.

கல்வி, விளையாட்டு, செய்தி உட்பட பல்சுவை நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்வதற்கும் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், இலங்கை தொடர்பான செய்திகளை ஒலிபரப்புச் செய்யும் போது அரச தகவல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இந்த ஒலிபரப்பு நிலையத்தை கிளிநொச்சியில் அமைத்தல் வேண்டும். இதன் வீச்சு எல்லை 20கிலோமீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கியதாகவும், 75மீற்றர் உயரத்திற்கு மேற்பட்டதாக அமையக் கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்தும் முகமாகவும், வடக்கு - கிழக்கு மக்களின் கலை, கலாசாரம், கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் ஒலிபரப்புச் செய்வதற்கு ஒலிபரப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு புலிகள் அரசைக் கேட்டிருந்தனர்.

புலிகளின் இந்த வேண்டுகோளுக்கு இணங்கவே அனுமதி வழங்கப்பட்டது.

இதற்குள் தேவையான ஒலிபரப்புச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு நோர்வேத் தூதரகம் தனது பங்களிப்பை வழங்கியது. இந்த ஒலிபரப்புச் சாதனங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எத்தகைய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது என அரச அதிகாரிகளினால் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே அவை வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

- இவ்வாறு தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இறுதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் காய்ச்சல், டெங்கு, நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்கள் அதி தீவிரமாக மக்கள் மத்தியில் தற்போது பரவி வருகின்றன. இவ்வேளையில் குடாநாட்டு வைத்தியசாலைகளுக்கான மருந்து வகைகள் இன்னமும் வந்து சேராமல் இருப்பது நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.(ஒ-15)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தனர் - என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி தமிழீழ மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சிப்பாயை அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதியாளர் உத்தரவிட்டார்.

(ஐ-3)

## ஒன்று கூடல் நிகழ்வு

வலி - தெற்கு,டிசெ.28

உடுவில் தெற்கு சத்தியபுரம் திருச்சபையின் வாலிபர் ஒன்று கூடல நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வாலிபர் சங்க தலைவர் த.யூதராஜா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் அருட் சகோதரன் பி.தேவமித்திரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

(ஒ-152)

# விளையாட்டு

## நான்காவது ஆஷஸ் போட்டியில் ஜஸ்ரின் லாங்கர் இரட்டைச்சதம்

இங்கிலாந்துடனான நான்காவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வீரர் ஜஸ்ரின் லாங்கர் 250 ஓட்டங்களைப் பெற்றார். மெல்போர்னில் இப்போட்டி நடைபெறுகிறது.

போட்டியின் முதல்நாள் ஆட்ட முடிவில் அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 356 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. லாங்கர் 146 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

போட்டியின் இரண்டாவது நாளான நேற்று லாங்கர் இரட்டைச்சதம் குவித்தார்.

407 பந்துவீச்சுக்களில் 30 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 250 ஓட்டங்களைக் குவித்தார் லாங்கர். டெஸ்ட் போட்டிகளில் அவர் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிகை இதுவாகும்.

2000ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு எதிராகப் பெற்ற 233 ஓட்டங்களே அவரது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக முன்னர் இருந்தது.

முதல்நாள் ஆட்ட முடிவின்போது 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ. நேற்று அவர் 77ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இம்மைதானத்தில் ஸ்ரீவ்வோவின் இறுதிப் போட்டி இதுவே எனக் கருதப்படுவதால், அவர் ஆட்டமிழந்து திரும்பியபோது பார்வையாளர்கள் எழுந்து நின்று மரியாதைக் கரகோஷம் செய்தனர்.

அவுஸ்திரேலியா 6விக்கெட் இழப்பிற்கு 551ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டது. அறிமுக வீரர் மார்ட்டின் லவ் ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களைப் பெற்றார்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் கிறேக் வைட் 133 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நேற்று இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆட்ட முடிவின்போது 3 விக்கெட் இழப்பிற்கு 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தது அவ்வணி. (ஒ)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்: இலங்கை அணியில் ஹஷான்

எதிர்வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான இலங்கை அணியில் ஹஷான் திலகரத்ன சேர்க்கப்பட்டுள்ளார்.

35 வயதான திலகரத்ன, நீண்ட காலத்தின்பின் தென்னாபிரிக்காவுடனான ஒருநாள் போட்டிகளுக்கான அணியில் இடம்பெற்றார். எனினும், அத்தொடரில் அவர் பிரகாசிக்கவில்லை.

அதனால், வீபி. கிண்ணத்துக்கான முதல் மூன்று போட்டிகளுக்கும் அவர் சேர்க்கப்படவில்லை.

இத்தொடரின் இரண்டாவது சுற்று எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டிகளுக்கான இலங்கை அணியில் நான்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி கலுவித்தாரண, நுவன் சொய்சா, திலான்சமரவீர, சஜீவடிசில்வா ஆகியோர் இலங்கைக்குத் திரும்பவுள்ளனர்.

அரவிந்தடிசில்வா, முத்தையா முரளிதரன், அவிஸ்க குணரத்ன, புத்திக்க பெர்னாண்டோ ஆகியோர் இலங்கை அணியில் இணையவுள்ளனர். இவ்வணியே உலகக் கிண்ண போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளது.

15பேர் கொண்ட இவ்வணியில் 9 துடுப்பாட்ட வீரர்களும், 5 வேகப் பந்துவீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளனர். முத்தையா முரளிதரன் மாத்திரமே ஒரேயொரு சுழல்பந்து வீச்சாளர்.

விக்கெட் காப்பாளராக குமார் சங்கக்கார கடமையாற்றவுள்ளார். மாற்று விக்கெட் காப்பாளராக ஹஷான் திலகரத்ன விளங்குகிறார்.

1999 உலகக் கிண்ணப் போட்டிகளின் பின் அணியிலிருந்து நீக்கப்பட்ட திலகரத்ன இரு வருடங்களுக்குப் பின் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டார். ஆனால், 1999ஆம் ஆண்டின் பின் இதுவரை 2 ஒருநாள் போட்டிகளில் மாத்திரமே அவர் பங்கு பற்றியுள்ளார்.

(ஒ)

## இம்மாதம் 20ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர் பிரிவில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற்றோரின் எண்ணிக்கை சுமார் 20ஆயிரம் என்று ஆஸ்பத்திரி பதிவேடுகளில் இருந்து தெரிகின்றது.

உத்தேச மதிப்பீட்டின் படி தினமும் சுமார் ஆயிரத்து 300பேர் காய்ச்சலுக்காக சிகிச்சை பெற வருகின்றனர்.

வைரஸ் காய்ச்சல் தொற்றிய ஆறு பேர் மரணமடைந்திருக்கின்றனர். ஏழாவது நபரான பெண் ஒருவர் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

ஆவரங்காலைச் சேர்ந்த இரா. மையா திருமலை (வயது 50) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவர். பத்து நாள்களாக காய்ச்சல் பீடித்திருந்த இவர் காய்ச்சல் முற்றிய நிலையில் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்தார்.

உயிரிழந்த ஏழு பேரில் ஒரு சிலரில் 'டெங்கு' காய்ச்சல் அறிகுறிகள் இருந்திருக்கின்றன. வேறு சிலரில் டெங்கு, நெருப்புக் காய்ச்சல், மலேரியா, மூளை மலேரியா போன்ற அறிகுறிகள் ஒன்றாக வெளிப்பட்டுள்ளன - என்று வைத்திய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

'டெங்கு' வைரஸின் பரம்பல் அதிகரித்திருப்பதையே தற்போதைய நிலைமை வெளிப்படுத்துகிறது என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கொழும்பு உட்பட தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் 'டெங்கு' நுளம்புகளால் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. குடாநாட்டில் கடந்த காலங்களில் 'டெங்கு' அச்சுறுத்தல் பெரிய அளவில் இருக்கவில்லை.

தற்போது குடாநாட்டுக்கும் தென் பகுதிக்கும் இடையிலான போக்குவரத்து சகஜமாகியிருப்பதால், பயணிகள் மூலம் 'டெங்கு' நோய் குடாநாட்டுக்குள் காவி வரப்பட வாய்ப்பிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

குடாநாட்டில் காய்ச்சல் பற்றிய பீதி பரவியுள்ளது. எனினும் இந்த அச்சுறுத்தல் பற்றி வீணாக பீதிக்கு உள்ளாக வேண்டாம் என்று தெரிவித்திருக்கும் டாக்டர்கள், நோய்த் தடுப்பு முறைகளையும், சுகாதார நடைமுறைகளையும் அலட்சியம் செய்யாமல் கடைப்பிடிக்குமாறு ஆலோசனை தெரிவித்திருக்கின்றனர்.

நீர்நிலைகள் மற்றும் சுற்றுச் சூழலில் சுகாதாரம் பேணுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நுளம்புப் பெருக்கத்தைத் தடுக்கவும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப்புப் பெறவும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(ஐ-15-139)

# முதல் மனித குளோனிங் குழந்தை!

பாரிஸ்,டிசெம்பர்28

**பல வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் குளோனிங் மூலமான உலகின் முதலாவது மனிதக் குழந்தை பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அக்குழந்தை ஒரு பெண் குழந்தை என்று குளோனிங் முறையில் மனிதனை உருவாக்கும் சங்கமான 'கல்ட்' (Cult - Clonaid human coloning society) என்ற மருத்துவ அமைப்பைச் சேர்ந்த பிரெஞ்சு விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

கடந்த வியாழனன்று அறுவைச் சிகிச்சை (சிசேரியன்) மூலம் பிறந்த அப்பெண்குழந்தை "முழுமையான உடல் நலத்துடன்" இருப்பதாக பிரிஜிட்டி பொய்ஸிலியர் என்ற அந்த விஞ்ஞானி தெரிவித்தார். ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்கு அவர் தொலைபேசி மூலமான பேட்டி ஒன்றை வழங்கினார். அப்போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

குளோனிங் மூலமான மனித உற்பத்திக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் பிறந்த குழந்தை குளோனிங் மூலம்தான் பிறந்தது என்பதை சுயாதீன விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துவது இப்போதைக்குச் சாத்தியமற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

'கல்ட்' அமைப்பின் மேற்படி அறிவிப்புக்கு நிச்சயமாக எந்தவித சான்றுகளும் இல்லை. சான்றுகளையும் மாதிரிகளையும் சமர்ப்பிக்காத வரை அவர்களின் கூற்றை உண்மை என்று நம்ப முடியாது - என்று பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மரபணுவியலாளர் அக்ஸல் கான் தெரிவித்தார். "குளோனிங் முறையில் குழந்தை பிறப்பிக்கப்பட்டிருந்தால் அந்தக் குழந்தை எவ்வாறு உருவாக்கப்பட்டது என்ற வவரத்தை (Map) அவர்கள் வெளியிடவேண்டும். அத்துடன் அந்தக் குழந்தை யாருடைய மாதிரி, அதாவது எவரிடம் இருந்து பெறப்பட்ட கலங்களில் இருந்து குழந்தை உருவாக்கப்பட்டது என்ற விடயத்தையும் அவர்கள் வெளியிட்டாகவேண்டும்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.



பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள குளோனிங் பெண் குழந்தை பற்றிய முழுமையான விவரத்தை நேற்று வெள்ளிக்கிழமை 'கல்ட்' அமைப்பின் தலைவரான விஞ்ஞானி பொய்ஸிலியர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிடுவதாக இருந்தது.

சுயாதீனமான விஞ்ஞானிகள் பிறந்த குழந்தை குளோனிங்முறை மூலம் பிறந்தது என்பதை உறுதிப்படுத்தினால் அதுவே உலகில் முதலாவதாக பிறந்த குளோனிங் குழந்தையாக இருக்கும்.

மேற்கு நாடுகள் பலவற்றிலும் மனித குளோனிங்குக்கு தடை விதிக்கப்பட்டிருந்தபோதும் சட்டபூர்வமற்ற விதத்தில் பல விஞ்ஞானிகள் குளோனிங் மூலம் மனிதனை உற்பத்தி செய்யும் ஆய்வில் ஈடுபட்டு வந்தனர்; ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளில் முதற்தடவையாக பெறுபேறு கிடைத்துள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித குளோனிங் ஆய்வுகளுக்கு வத்திக்கான் உட்பட உலகின் சமய அமைப்புக்கள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. (ம)

## தீவிரவாதிகள் தாக்குதல்

## பிலிப்பைன்ஸில் 12பேர் உயிரிழப்பு



மின்டோனாவில் ரோந்து சுற்றும் பிலிப்பைன்ஸ் படையினர்

மணிலா,டிசெ.28

பிலிப்பைன்ஸின் தென்பகுதித் தீவான மின்டோனாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் வியாழனன்று நடத்திய தாக்குதலில் 12பேர் கொல்லப்பட்டனர். மேலும் 9பேர் காயமடைந்தனர்.

அங்கு இயங்கிவரும் கனேடிய நிறுவனம் ஒன்றின் ட்ரக் மீதே அவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் பாதுகாவலர்கள் 3பேரும் நிறுவன ஊழியர்கள் 9பேரும் உயிரிழந்தனர். அனைவரும் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று தெளிவாகத் தெரியவில்லை என்று இராணுவப்பேச்சாளர் லெப்ரினன்ட் கேணல் டானியல் லூனிரோ் கூறினார். ஆனால், மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று அவர் சந்தேகம் தெரிவித்தார்.

இதே தீவில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் நகரமேயர் உட்பட 16பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வியாழனன்று கனேடிய நிறுவன வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர், மோரோ தீவிரவாத அமைப்பிடம் இருந்து அந்த நிறுவனத்துக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ம)

## கென்யாவில் நேற்று தேர்தல் வாக்களிப்பு



வாக்களிக்கக் காத்திருக்கும் கென்ய மக்கள்

லண்டன்,டிசெ.28

கென்யாவில் அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.



தற்போதைய அதிபரின் ஆதரவு பெற்ற வேட்பாளர் உரு கென்யாட்டா.

உள்ளூர் நேரப்படி காலை 6மணிக்கே வாக்களிப்பு நிலையங்கள் திறக்கப்பட்டன. மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று வாக்களித்தனர். மாலை 4மணிக்கு வாக்களிப்பு முடிவடைந்தது.

இந்த அதிபர் தேர்தல் மூலம் தற்போதைய அதிபர் டானியல் அரப் மொய்யின் 24ஆண்டுகால அதிகாரம் முடிவுக்கு வருகின்றது. அதிபர் பதவிக்கு 5பேர் போட்டியிடுகின்றனர். 10மில்லியன் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 50சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வாக்களித்துள்ளதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்று உடனடியாகவே வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், திங்கட்கிழமைக்கு முன்னர் இறுதி முடிவுகள் வெளியாகும் போன்று தோன்றவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.



அதிபர் தேர்தலின் முக்கிய வேட்பாளர் கிபாக்கி. துணை அதிபராகவும் இருந்துள்ளார்.

இந்தத் தேர்தலில் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளே வெற்றி பெறும் என வாக்களிப்புக்குப் பின்னான கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன. 24 ஆண்டுகளாக அதிகாரத்தில் இருந்த டானியல் அரப் மொய்யிற்கு பதிலான புதிய அதிபர் ஒருவர் தெரிவுசெய்யப்படவுள்ளார் என்பதால் இந்தத் தேர்தல் உலக நாடுகள் அனைத்தினதும் கவனத்தினைப் பெற்றுள்ளது. தேர்தல் வாக்களிப்பு பெருமெடுப்பிலான வன்முறைகள் ஏதும் இடம்பெறாமல் நடந்துமுடிந்துள்ளன. முடிவுகள் விரைவிலேயே வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்க்கட்சி வெற்றிபெறும் என்ற கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்ததை அடுத்து எதிர்க்கட்சி வேட்பாளர் கிபாக்கி உற்சாகமாகக் காணப்படுகின்றார்.(ம)

## 3ஆயிரம் 'இன்ரநெற் கபே'கள் திடீரென சீனாவில் மூடப்பட்டன

பீஜிங்,டிசெ.28

பாதுகாப்பற்றவை எனக் கருதப்பட்ட 3ஆயிரம் 'இன்ரநெற் கபே' (Internet Cafes - இணையச் சேவையைப் பெறும் நிலையங்கள்) சீனா திடீரென மூடியுள்ளது மேலும் 12 ஆயிரம் இன்ரநெற் கபே'களையும் சீன அதிகாரிகள் தற்காலிகமாக மூடியுள்ளனர்.

உலக அரங்கில்

கடந்த ஜூனில் இத்தகைய 'இன்ரநெற் கபே' ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக விசாரணை நடத்திய அதிகாரிகள், இத்தகைய 'இன்ரநெற் கபே'கள் நெருக்கடியான இடங்களில் இருப்பதைக் கண்டறிந்தனர். விபத்து ஏற்பட்டால் உடனடியாக வெளியேற முடியாத நெருக்கடி நிலையிலேயே இவை அமைந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்தே மிகவும் நெருக்கடியான பகுதிகளில் மோசமான நிலையில் இயங்கும் 'இன்ரனெற் கபே'களை மூடிவிட அதிகாரிகள் முடிவு செய்தனர்.

தற்காலிகமாக மூடப்பட்ட 'இன்ரநெற்கபே'களில் வசதிகள் மேம்படுத்தப்பட்டதும் அவைமீண்டும் இயங்க அனுமதிக்கப்படும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

கடந்த 6 மாத காலத்தில் நாட்டில் உள்ள 45 ஆயிரம் 'இன்ரனெற் கபே'களில் தீவிர சோதனை நடத்திய பின்னரே அதிகாரிகள் 3 ஆயிரம் 'கபே'களை மூட முடிவு செய்ததாக நாட்டின் பொருளாதாரத்துறை அமைச்சர் லி ரொங்ரோங் தெரிவித்தார். (ம)



எரிந்த இன்ரநெற் கபே



சீனாவில் உள்ள இன்ரநெற் கபே ஒன்று

## ரஷ்ய கடத்தல் நாடகத்தில்

## உயிரிழந்தவர்களின் உறவினர் நஷ்டஈடு கோரி மனு தாக்கல்



பணய நாடகம் துயர முடிவுக்கு வந்தபின்னர் மீட்புப் படையினர் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் எடுக்கப்பட்ட அப்போதைய படம்.

மொஸ்கோ,டிசெ.28

கடந்த ஒக்ரோபர் மாதம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்ற கடத்தல் நாடகத்தை முறியடித்து சிக்கிக்கொண்டவர்களை மீட்க ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின்போது உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நஷ்டஈடு கோரி மனுத் தாக்கல் செய்துள்ளனர். அந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.


இந்த மனுவில் உள்ளூர் அதிகாரிகளிடம் 4 கோடி அமெரிக்க டொலர் நஷ்டஈடு கோரியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் ரஷ்ய படையினர் பயன்படுத்திய மயக்க வாயுவால் 120 பேர்வரையில் உயிரிழந்தமை தெரிந்ததே.

இவ்வாறு உயிரிழந்வர்களின் உறவினர்களே தற்போது நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர். ஆனால், இந்த உயிரிழப்புக்களுக்குத் தான் பொறுப்பேற்கப் போவதில்லை என்று ரஷ்ய அரசு தெரிவித்துள்ளது. (ம)

## ஏவுகணை ஏற்றுமதியை அமெரிக்கா தடுக்கமுடியாது

### வடகொரியா சீற்றம்



வடகொரிய எல்லையை கண்காணிக்கும் தென்கொரியச் சிப்பாய்

சியோல்,டிசெ.28

ஏவுகணை தயாரிப்பதையும் அவற்றை ஏற்றுமதி செய்வதையும் நிறுத்துமாறு கூறுவதற்கு அமெரிக்காவுக்கு உரிமை இல்லை என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய அரசின் அதிகாரபூர்வ ஏடான 'மிஞ்சு சோயன்' என்ற பத்திரிகை இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

"வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ளது. எமது நாட்டின் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக்கூடிய அபாயமும உள்ளது. எனவே ஏவுகணைகளைத தயாரிப்பதும் அவற்றை ஏற்றுமதி செய்வதும் கட்டாயமாகிவிட்டது.

"இது வடகொரியாவின் சொந்த விவகாரம். இதில் தலையிட அமெரிக்காவுக்கு எந்த உரிமையும் இல்லை. அந்நியச் செலாவணியைத் திரட்ட ஏவுகணைகளை ஏற்றுமதி செய்யவேண்டியுள்ளது. இத்தகைய ஆயுத ஏற்றுமதியில் எவ்வித மீறலும் இல்லை. உலகிலேயே அதிக அளவில் ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடு அமெரிக்காதான். இந்நிலையில் சர்வதேச ஆயுத சோதனையாளராகச் செயற்பட அமெரிக்காவுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

"கட்டுப்பாட்டுடன் செயற்பட அமெரிக்கா முதலில் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறும் போக்கை அது கைவிட வேண்டும்" - என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை -

வடகொரியாவின் நிலைப்பாடு குறித்து கருத்துத் தெரிவித்த பெயர் குறிப்பிடாத அதிகாரி ஒருவர், "அமெரிக்காவுடனான உறவுகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு விளையாட்டை ஆட வடக்கு கம்யூனிஸ்ட் முயல்கின்றது" - என்று தெரிவித்திருக்கிறார். (ம)

## பிலிப்பைன்ஸில் மோதல்

மணிலா,டிசெ.28

பிலிப்பைன்ஸில் இராணுவத்துக்கும் அபு சாயுப் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவரும் தீவிரவாதி ஒருவரும் கொல்லப்பட்டனர்.

ஆயுததாரிகள் சிலர் தெற்கு நகரில் நடமாடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அது குறித்து விசாரிக்கச் சென்ற இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலேயே மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

அபு சாயுப் தீவிரவாதிகளுக்கும் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.(ம)

## இனிய இல்லற வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு
## 28-12-1977



**திரு.செல்வரட்ணம் குயின்ரஸ் பெனடிக்ற் (ஆசிரியர்)**
**திருமதி பிலோமினா குயின்ரஸ் பெனடிக்ற் (ஆசிரியை)**

(பபா குஞ்சு)

இனித்திடும் இத்திருமண நாளில்
சகல சம்பத்துக்களும் பெற்று வாழ்ந்திடும்
இவர்கள் தமது இல்லற வாழ்வின் இருபத்தைந்து
ஆண்டு நிறைவை இன்று (28.12.2002) சனிக்கிழமை
அவர்களது அருமை மகளுடனும் அன்புச் சகோதரியின்
பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும்
கொண்டாடி மகிழ்கின்றனர்.

இடம்:
P.O. BOX 841,
LERIBE 300, LESOTHO,
SOUTH AFRICA.

திருமதி R.சேவியர் (சகோதரி)
10A, கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
(12341)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி இரஜனி இராஜமனோகரன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி செல்லமுத்து தம்பு

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஆளணியினர்.
யா/இந்து மகளிர் கல்லூரி.
(12359)

## கண்ணீர் அஞ்சலி



மாவிட்டபுரத்தை
பிறப்பிடமாகக் கொண்ட
திருமதி
**லீலாதேவி சங்கரலிங்கம்**
B.A. Hons
(யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்கள் கனடாவில் அகாலமரணம் அடைந்துவிட்டார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.


*ஆத்மா சாந்தி அடைவதாக!*

நிரந்தர முகவரி: *மாவிட்டபுரம்.*
தற்காலிக முகவரி:
*ஸ்ரேஷன் வீதி,*
*கொக்குவில்.*
(12353)

செல்வி மு.ஜெயந்தி
(மைத்துனி)

## 35ஆம் நாள் நினைவலைகள்

எமது குலவிளக்காம்
**அதிரியான் பேதுறு யாக்கோபு**



அவர்களின் 35ஆம் நாள் நினைவாக நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையில் கலந்துகொண்டு எமது தந்தையின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(12347)

## ஒளிவிழா

சண்டிலிப்பாய்,டிசெ.28

பண்டத்தரிப்பு [illegible] கூட்டுறவுச் சங்கம் [illegible] ஒளிவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு [illegible] தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு.எஸ். அந்தோனிப்பிள்ளை அடிகளார் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார். (ம-135)

✪ ✪ ✪

சண்டிலிப்பாய்,டிசெ.28

சில்லாலை புனித சூசையப்பர் வாலிபர் சங்கம் நடத்தும் சில்லாலை பங்குமக்களின் வருடாந்த ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு.எஸ். அன்ரனிப்பிள்ளை அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ம-135)

✪ ✪ ✪

சண்டிலிப்பாய்,டிசெ.28

பண்டத்தரிப்பு கத்தோலிக்க பங்கு மக்களினால் நடத்தப்படும் வருடாந்த ஒளிவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ம-135)

✪ ✪ ✪

அரியாலை,டிசெ.28

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழா இன்று சனிக்கிழமை காலை 10மணிக்கு சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் நற்செய்தியை திருமதி ஸ்ரீஸ்கந்தராஜாவும் மறை உரையை அருட்திரு.பயஸ் அடிகளாரும் நிகழ்த்துவார்கள்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான செ.கனகசபாபதி, பொ.சிவலிங்கம் மற்றும் சங்கத்தின் உப தலைவர் பெ.யேக்கப், சங்க இயக்குநர் சபா.தியாகராஜா ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்கள். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-17)

✪ ✪ ✪

யாழ்ப்பாணம்,டிசெ.28

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தின் நலன்புரிக்கழகம் நடத்தும் ஒளிவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மண்டபத்தில் கழகத்தலைவர் இ.தவராஜா தலைமையில் நடைபெறும். அருட்திரு. ஆர்.எக்ஸ்.நேசராஜா ஆசியுரை வழங்குவார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ஐ)

✪ ✪ ✪

சண்டிலிப்பாய்,டிசெ.28

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

யாழ்.ஸ்ரான்லி வீதியிலுள்ள மன்ற அலுவலகத்தில் மன்றத் தலைவர் ந.கந்தையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு.ம.பெ.ஞானரத்தினம் அடிகளார் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார். ஜி.ரி.இசற் நிறுவன பிரதிநிதி உட்பட பலர் இதில் கலந்துகொள்வார்கள். (ம-135)

**சைன் உடுவில்**
**A/L 2005**
கலை, வர்த்தக வகுப்பு
ஆரம்பம்: 04.01.2003
(8.00a.m.)
அனுமதிகளைப் பெறவும்.
(12319)

"கல்வியே எதிர்காலத்தை நிர்ணயிக்கும்"
**பிரகாஷ் அக்கடமி**
*ஆலங்குழாய் வீதி,*
*சண்டிலிப்பாய்.*
☆ தரம்-03 முதல் தரம்-09 வரை சகல பாடங்களும் நடைபெறுகின்றன.
☆ தரம்-10,11 கணிதம் பிரத்தியேகமான முறையில் நடைபெறுகின்றன.
☆ மிகக் குறைந்த கட்டணமே அறவிடப்படுகிறது.
(12354) - நிர்வாகி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துஷ்யந்தன் சுகிர்தாதேவி

தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி துஷ்யந்தன் சுகிர்தாதேவி அவர்கள் 24.12.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் [illegible] மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*ஊரெழு வடக்கு,*
*சுன்னாகம்.*
(12355)

தகவல்:
S.குகதாஸ்.

## திருமதி மேரி யோசேப்பின் நீக்கிலஸ்

நாரந்தனை மத்தியைப் பிறப்பிடமாகவும் இல.51, கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசேப்பின் நீக்கிலஸ் (25.12.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாசமிகு கணவர் S.A.நீக்கிலஸ்
*(முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்,*
*நாரந்தனை புனித பேதுரு - பாவிலு ஆலயம்.)*

*இல.51, கோயில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12352)

## கந்தையா சின்னத்தம்பி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, கட்சன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி 26.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை, கனகரத்தினம், சதாசிவம், இராமப்பிள்ளை மற்றும் வைத்திலிங்கம் (தம்பு), பொடிசிங்கம், கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டக்கச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கோபாலபிள்ளை
*(கணக்காளர், நெடு.ப.நோ.கூ.சங்கம்)*

*கட்சன் வீதி,*
*வட்டக்கச்சி.*
(12338)

## சீவரத்தினம் இராசதுரை

*(துரைச்சாமி - சங்குவேலி)*

தம்பளை, சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சீவரத்தினம் இராசதுரை (துரைச்சாமி) அவர்கள் 26.12.2002 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் மகனும் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் மருதராசா (லண்டன்), மாதினி, மகாதேவி (சுவிஸ்), மல்லிகா (கனடா), மகாசக்தி, மங்களேஸ்வரி (கனடா), மகாவிஷ்ணு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம் (உரும்பிராய்), நவரட்ணம் (கனடா), மங்கையர்க்கரசி, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மகுலபவானி (லண்டன்), ஜெயபரன் (முகாமையாளர், ப.நோ.கூ.ச., சுன்னாகம்), நிருபேந்திரன் (சுவிஸ்), நவரட்ணராஜா (கனடா), புவனேந்திரன், மோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலன், ஜெயதீசன், ஜெனார்த்தனன், ஜெகிந்தன், மதுரா, ஜெயப்பிரதாப், நிதுரன், மீனுஜா, நமயா, கஜித், கஜன், இலக்கியா, தமிழினி, புகழினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2002) ஞாயிறு பிற்பகல் 1.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பளை,*
*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.*
(12351)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## குமாரசாமி தர்மலிங்கம்

*(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)*

காரைநகர், சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், பழம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தர்மலிங்கம் நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவரஞ்சனி மற்றும் குவரஞ்சனி (பிரதேச செயலகம், வேலணை), துஷ்யந்தன் (லேக்ஹவுஸ், யாழ்.கிளை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி, கனகலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபாலபிள்ளை (அனலை), பேரம்பலம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2002) சனிக்கிழமை காலை 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம் துஷ்யந்தன்
(மகன்).

*66/3, பழம் வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
(12336)

## பொன்னையா சுப்பிரமணியம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வெவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுப்பிரமணியம் 25.12.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் திரு.திருமதி பொன்னையா தம்பதிகளின் மகனும் திரு.திருமதி பிள்ளையனார் வீரகத்தியின் மருமகனும் அமரர் பழனி (நீர்ப்பாசன பொறியியலாளர்) மற்றும் கனகசபை (ஸ்ரீ விஷ்ணு அசோசியேட்), அமரர் யோகம்மா, அமரர் பேரின்பநாயகி, அமரர் சண்முகலிங்கம் மற்றும் மகேஸ்வரி (கனடா), மகாலட்சுமி, மாணிக்கவாசகர் (அமெரிக்கா), தவமணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தவபாக்கியவதி, சுப்பிரமணியம், ராமசாமி, தங்கராசா, புஷ்பலீலா, புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2002) சனிக்கிழமை காலை 10.00மணிக்கு 170, கொழும்புத்துறை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*170, கொழும்புத்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12334)

தகவல்:
சு.கனகசபை (மகன்).

உதயன்

## பொருத்தமற்ற போக்கு

திற்போதைய சமாதான முயற்சிகளில் பெரும் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியிருக்கின்றது உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை.

இதுவரை நடைபெற்ற நேரடிப் பேச்சுக்களிலும், அதற்கு முந்திய யுத்தநிறுத்த உடன்பாட்டை ஒட்டியும் இவ்விவகாரம் பல தடைவைகள் இருதரப்பாலும் விரிவாக விவாதிக்கப்பட்டும் ஆராயப்பட்டும் வந்துள்ளது. இது விடயத்தில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டதாகவும் நம்பப்பட்டது.

ஆனால், இவ்விவகாரம் தொடர்பாக இலங்கைப் பாதுகாப்புப் படைகள் எடுத்திருக்கும் இறுக்கமான நிலைப்பாடு, சமாதான முயற்சிகளே இனிமேல் முன்னகருமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் அளவுக்கு பாரதூரமான நிலையை உருவாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் வார்த்தைகளில் கூறுவதாயின் - "சமாதானம் மற்றும் இயல்பு வாழ்க்கைக்கான பாதையில் தாண்டமுடியாத தடைகளை இராணுவம் போடுகின்றது" எனலாம்.

உயர்பாதுகாப்பு வலயக் கெடுபிடியைத் தளர்த்துவதற்கு இலங்கை இராணுவம் நிபந்தனை விதிக்கின்றது. அந்த நிபந்தனைகளில் இரண்டு முக்கியமானவை.

ஒன்று - புலிகளின் ஆயுதக் களைவு (Disarming) மற்றையது - புலிகளின் ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்வது (De Commissioning).

இந்த நிபந்தனைகளில் குறிப்பிடப்படும் விடயங்கள் தமிழ்மக்களின் உயிர்ப்பாதுகாப்போடும் பந்தோபஸ்தோடும் தொடர்புடையவை. இந்த நிபந்தனைகளை விதிப்பதன்மூலம், நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் சமரசப் போக்கு நிலைக்கு எதிரான போர்முனைப்பில் தான் உறுதியாக இருப்பதை இராணுவம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

புலிகள் குறிப்பிட்டிருப்பதுபோல் தமிழ்மக்களின் - குறிப்பாகக் குடாநாட்டில் படை நடவடிக்கைகளினால் தமது வீடு, வாசல்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் - துன்ப, துயரங்களை நீக்கும் மனிதாபிமானக் கரிசனைமிக்க விடயத்துக்கு அவர்களின் உயிர்ப்பாதுகாப்போடு தொடர்புடைய விவகாரத்தை இராணுவம் நிபந்தனையாக்குகின்றது.

அதுமட்டுமல்லாமல், அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இதுவரை எட்டப்பட்ட இணக்க முடிவுகளை நடைமுறைப்படுத்தவேண்டிய தனது கடப்பாட்டைத் தட்டிக்கழிக்க முயல்வதன்மூலம் சமாதான முயற்சிகளுக்கு வேட்டுவைக்கவும் இராணுவம் முயல்கின்றது.

இராணுவத்தின் இந்தப் போக்கைத் தட்டிக்கொடுப்பதுபோல இலங்கைக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் கருத்து வெளியாகியிருப்பது தமிழ்மக்களைப் பொறுத்தவரை 'வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது' போன்று உள்ளது.

"உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து அரசபடைகளை விலக்கினால் படைகளின் பாதுகாப்பு, தாக்குதல் திறன் குறைந்துவிடும். புலிகளுக்கு அவர்களது இராணுவப் பலம் முக்கியமானதுபோல அரசுத் தரப்புக்கும் இராணுவத்தின் பலம் முக்கியமானது." - என்ற சாரப்பட அவரது கருத்து வெளியாகியிருக்கின்றது. அதாவது, உயர்பாதுகாப்பு வலயக் கொடுபிடியைத் தளர்த்தும்படி வற்புறுத்தாதீர்கள் என்ற செய்தியைச் சொல்லாமல் சொல்ல முயல்கின்றார் கண்காணிப்புக் குழுத்தலைவர்.

ஆயுதங்களை வாங்கிக் குவித்து, ஆட்களைத் திரட்டி படைப்பலத்தைப் பெருக்குவதும் பேணுவதும் வேறு விடயம்.

அப்பாவி மக்களைப் போரியல் நடவடிக்கைகள் மூலம் அவர்களது வாழ்விடங்கள் மற்றும் தாயகப் பூமியிலிருந்து விரட்டியடித்து, அந்த பிரதேசங்களை கபளீகரம்செய்து ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருப்பது மனிதாபிமானத்துக்குப் புறம்பான கொடூரச் செயல்.

அதனைப் போரியல் பாதுகாப்பு விவகாரமாக சித்திரித்து, அந்தச் செயற்பாட்டை நியாயப்படுத்த முயல்வது இரண்டு தரப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்யவந்திருக்கும் கண்காணிப்புக் குழுவுக்கும் அதன் தலைவருக்கும் பொருத்தமான செயல் அல்ல.

அதுவும், அரசு - புலிகள் மூன்று சுற்று நேரடிப் பேச்சுகள் எதிர்பாராத அளவு முன்னேற்றத்தோடு நடந்தேறியுள்ள நிலையில் அப்பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட விடயத்தைச் செயற்படுத்துவதற்கு எதிராக இலங்கை இராணுவம் வரிந்து கட்டிக்கொண்டு போர் முனைப்புடன் நிற்கும்போது - அந்த இணக்க நிலைக்கு மாறாக, இராணுவத்தின் போர் வெறிக்கு ஒத்து ஊதும் வகையில் - கருத்து வெளியிடுவது கண்காணிப்புக்குழுத் தலைவரின் பதவிக்கும் பொறுப்புக்கும் பொருத்தமானதோ, நீதியானதோ, நியாயமானதோ அல்ல.

---

நெல்லியடியில் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம்:

# யாழ்.உதவிப் பொலீஸ் அத்தியட்சகரை வாக்குமூலம் பதிவுசெய்ய அழைப்பு!

## மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்தது

யாழ்ப்பாணம்,டிசெ.28

நெல்லியடியில் மறியல்போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்கு வருமாறு யாழ்.பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ் அத்தியட்சகருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளது.

நெல்லியடியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்பாக கடந்த 10ஆம் திகதி பொதுமக்கள் திரண்டு மறியற்போரில் ஈடுபட்ட சமயம் அங்கு கடமையில் இருந்த பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களும் வர்த்தகர்களும் காயமடைந்தமை தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இச்சம்பவம் தொடர்பான விரிவான வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காகவே யாழ்.பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ் அத்தியட்சகரை எதிர்வரும் 2ஆம் திகதி விசாரணைக்கு சமுகமளிக்கும்படி ஆணைக்குழு கேட்டுள்ளது. (ம-8)

---

# மேட்டுநிலப் பயிர்களில் நத்தை தாக்கம் அதிகரிப்பு

## உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.மாவட்டத்திலுள்ள மேட்டுநிலப் பயிர்கள், நாற்றுமேடைகள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் ஆகியவற்றில் நத்தைகளின் தாக்கம் அதிகரித்து வருவதாக உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இங்கு நிலவுகின்ற காலநிலையின் காரணத்தினாலேயே இந்த நத்தைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இவை வளர்ந்த பயிர்களின் இலைகளையும் நாற்றுமேடைகளில் உள்ள நாற்றுகளையும் வெட்டி உண்கின்றன. இதன் தாக்கம் அதிகரிக்கும்போது பயிர்களின் சேதமும் அதிகமாகக் காணப்படுகின்றது.

இரவு வேளைகளிலேயே இவற்றின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதால் இவற்றை அழிப்பதும் கஷ்டமாக உள்ளது. ஆயினும், கீழ்க்காணும் முறைகளைக் கையாள்வதன்மூலம் இவற்றின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

★ பயிர்களின் மீதிகள் மற்றும் கற்குவியல்கள் போன்ற மறைவான இடங்களில் நத்தைகள் தங்கியிருந்து பெருக்கம் அடைவதனால் பயிர் நிலங்களைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

★ தோட்டத்தைச் சுற்றி அல்லது நாற்றுமேடையைச் சுற்றி மூன்று தொடக்கம் ஆறு அங்குல அகலத்துக்கு உமியைப் பரவி விடுவதனால் நத்தைகள் உட்செல்வதைத் தடைசெய்யலாம்.

★ மாலையிலும் இரவுவேளைகளிலும் நத்தைகளைக் கையால் எடுத்து உப்புக் கலந்த நீரில் போட்டுக்கொன்ற பின்னர் அவற்றை ஆழமான கிடங்கினுள் போட்டுப் புதைக்கலாம்.

★ பயிர் நிலங்களைச் சுற்றி 6 அங்குல அகலமும் 6 அங்குல ஆழமும் உடைய அகழியை வெட்டிவிடுவதன்மூலம் இரவு வேளைகளில் நடமாடும் நத்தைகள் இந்த அகழிக்குள் வீழ்ந்து விடும். பின்னர் காலையில் அவற்றை எடுத்து அழித்துவிடலாம்.

★ பயிர் நிலத்தைச் சுற்றி வெங்காயப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலமும் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். இப்பயிரானது நத்தைகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தவல்லது. (ம-10)

---

கைதாகிப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர்

# நீதிமன்றில் ஆஜராகத் தவறிய இருவர் பொலீஸாரினால் கைது!

வலி.வடக்கு,டிசெ.28

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்பட்டவர்கள் உரிய நீதிமன்றத்தவணைக்குச் செல்லாமையால் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா மேல் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்பட்டிருந்த அளவெட்டியைச் சேர்ந்த கதிரமலை ஸ்ரீதர், சுன்னாகம் முடவேம்படியைச் சேர்ந்த க.குலசிங்கம் ஆகியோரே சுன்னாகம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன் கடந்த செவ்வாய்க்கிழமை ஆஜர் செய்யப்பட்டனர்.

உரிய நபர்களை வவுனியா மேல்நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்வதற்கு வசதியாக யாழ்.சிறைச்சாலை மூலம் அனுப்பிவைக்கும்படி நீதிவானால் பணிக்கப்பட்டுள்ளது. (ம-86)

---

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 10 பேர் அச்சுவேலியில் சிக்கினர்

## மின்சார சபையினர் - பொலீஸார் கூட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.28

சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்திவந்த பத்துப்பேர் அச்சுவேலிப் பகுதியில் இரவோடு இரவாக கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

அச்சுவேலி சந்நிதி வீதியிலும், பத்தைமேனிப்பகுதியிலும் நடத்தப்பட்ட அதிரடி சோதனையின்போது இவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

மின்சாரசபையின் சுன்னாகம் பகுதி மின் அத்தியட்சகர் ஏ.நாகராஜா தலைமையிலான குழுவும் பொலீஸாரும் இணைந்து கடந்த வியாழன் இரவு நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போதே மேற்படி பத்துப்பேரும் சிக்கினர்.

இவர்கள் அன்றிரவே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். சட்டவிரோதமாக மின்சாரம் பெற பயன்படுத்தப்பட்ட இணைப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கைதான பத்துப்பேரும் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

---

# சங்கானை நலன்புரி முகாம்களில் சுகாதாரம் பேண நடவடிக்கை

வலி.மேற்கு,டிசெ.28

சங்கானையிலுள்ள நான்கு நலன்புரி நிலையங்களிலுமுள்ள மலசலகூடங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதியை அரச அதிபர் வழங்கியுள்ளார்.

சங்கானையில் கப்பண்டா முகாம், தோப்பு முகாம், நீதிவான் முகாம், சலேசியர் முகாம் ஆகிய நான்கு நலன்புரி முகாம்கள் உள்ளன. இந்த நான்கு முகாம்களிலும் மலசல கூடங்கள் சேதமடைந்து சுகாதாரச் சீர்கேட்டுடன் இருந்து வருகின்றன. ஆகவே, இந்த முகாம்களிலுள்ள மலசலகூடங்களைத் திருத்துவதற்கும் கழிவுகளை அகற்றுவதற்கும் அரச அதிபர் 52ஆயிரத்து 500 ரூபாவை சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு வழங்கியுள்ளார்.

இந்த மாதம் முடிவடைவதற்குள் முகாம்களில் செயற்படும் குழுக்கள் மூலம் இந்த மலசலகூடத் திருந்தவேலைகளை நிறைவேற்றுவதற்கு உதவிப் பிரதேச செயலரும் திட்டமிடல் உதவிப்பணிப்பாளருமான கே. தர்மராசா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஒ-175)

---

**நாளை**

மார்கழி 14
ஞாயிற்றுக்கிழமை
(29.12.2002)
திதி : தசமி
முற்பகல் 11.28 வரை.
நட்சத்திரம்: சுவாதி
முன் இரவு: 10.41 வரை.
கெர்ப்போட்டம் ஆரம்பம்
சுபநேரம் : 9.29 - 10.58
ராகுகாலம் : 4.58 - 6.28
(பழைய நேரப்படி)

---

**உதய வாக்கு**

தாய் தாயாகவே இருக்கிறாள், அவள் ஆயுள் முழுதுமே. தந்தை தந்தையாய் இருக்கிறார், புது மனைவியைப் பெறும்வரையில்.

---

# ஒரு வழிப்பாதை விதியை மீறுவோர்மீது நடவடிக்கை

## ரூபா 110 அபராதம் விதிப்பு!

சண்டிலிப்பாய்,டிசெ.28

யாழ்.நகரில் ஒரு வழிப்பாதைப் போக்குவரத்து வீதியை மீறும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் மீது பொலீஸார் தீவிர சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காங்கேசன்துறை(K.K.S.) வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய ஒருவழிப் பாதைகளூடாக விதியை மீறிச் செல்பவர்களிடம் அபராதம் அறவிடப்படுகிறது. 110ரூபா அபராதப் பணத்தை தபால் நிலையங்களில் செலுத்தி பற்றுச் சீட்டுடன் வருமாறு மோட்டார் சைக்கிள் சாரதிகள் பணிக்கப்படுகின்றனர். இதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது மோட்டார் சைக்கிள் முக்கிய ஆவணம் ஒன்றை பொலீஸார் பறித்து வைத்துக்கொண்டு அபராதப் பணத்தை செலுத்திவிட்டு வந்து அதனை பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - பரிசோதனையில் ஈடுபட்டுவரும் பொலீஸாருக்கு சில மோட்டார் சைக்கிள் சாரதிகள் லஞ்சம் கொடுத்துத் தப்பிக்க முயல்வதாகவும் தெரியவருகின்றது. (ம-135)

**LIONAIR** 24 மணி நேர சேவை.

கழிவுக் கட்டணங்களில்....
விமானப் பயணச்சீட்டுக்கள்!!

இன்ரநெற் அழைப்புகள் ரூபா 20/-

கொழும்பில் -
THAMPI BUILDING
177, Old Moor Street,
Colombo - 12.
Tel.: 01-343125, 075-355322

யாழ்.நகரில் -
92, கந்தப்பசேகரம் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222 2504
021-222 2893

HOTLINE: 0777-382345, 072-401423
(சி-25702)

## கணக்குப் பதிவாளர் (Book Keeper) தேவை

யாழ்.நகரப்பகுதியில் அமைந்துள்ள மொத்த விநியோக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றுக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கு அனுபவமும் ஆற்றலும் உடையவர் தேவை.

நிர்வாகத்திறன் மேலதிக திறமையாகக் கணிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி

விளம்பர இலக்கம்: 1737, (மே/பா) உதயன்,
யாழ்ப்பாணம்.
(12344)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பொருளியல் விரிவுரையாளர்
திரு.வி.அருளானந்தம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விசாகசுந்தரம் திரிபுரசுந்தரி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

*பட்டப்படிப்புகள் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

B.A.I. (வெளிவாரி)
பொருளியல் மாணவிகள்.
(12330)

## துயர் பகிர்கின்றோம்

எமது அலுவலக நிதி உதவியாளரான
***திருமதி செல்வமலர் சிவஞானரத்தினம்*** அவர்களின் அன்புக் கணவர்

### கனகரத்தினம் சிவஞானரத்தினம்

*(பிரணாவோடை, கோப்பாய் வடக்கு)*

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நலன்புரிச்சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*கோப்பாய்.*
(C-25689)

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்

## நாலாண்டு நினைவிலே மாமலர்கள் தூவுகிறோம்

மலர்வு
23 - 10 - 1948



உதிர்வு
27 - 12 - 1998

### திருமதி கந்தபுஸ்பதேவி அமரசிங்கம்

(இசை ஆசிரியை, பன்னாலை, தெல்லிப்பழை)

திதி 28-12-2002 சனிக்கிழமை

*நேற்று பிரிந்தாய்*
*நெகிழ்ந்திட்டோம் நெஞ்சுருகி*
*ஆற்றுப்பு நீராய்*
*அழுதிருந்தோம் வீடென்னும்*
*பேற்றுக்கா பெம்மை*
*பிரிந்தாலும் தென்றலெனும்*
*காற்றுப் போல் வந்து*
*கனிவுடனே தழுவியுயிர்*
*ஏற்றுகிறாய் தாயே*
*எந்நாளும் நின்னினை விற்*
*போற்றுகிறோம் பூத்தாவி*
*பெருமகளே ஏற்றிடுக!*

க.அமரசிங்கம்,
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பழை.
(12337)

அன்புள்ள கொழுநனும்,
ஆசையுள்ள பிள்ளைகளும்,
மருமகனும்.

## வீதியோரம் குவித்த கற்களால் மக்களுக்கு சிரமம்

குருநகர்,டிசெ.28

வீதியைப் புனரமைக்க வீதியோரம் குவிக்கப்பட்டுள்ள கற்கள், போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக மாறியுள்ள நிலைமை குருநகர் நகர்ப் பகுதியில் காணப்படுகிறது.

குருநகர் கடற்கரை வீதியைத் திருத்தியமைப்பதற்கு அவ்வீதியோரம் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. இக்கற்கள் குவிக்கப்பட்டு நாள்கள் பல கடந்த போதிலும் இவ்வீதி இதுவரை செப்பனிடப்படவில்லை.

இதனால் இக்கற்கள் வீதியின் மத்திவரை சிதறுண்டு பரவிக்கிடக்கின்றன. இதனால் மக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள். (ஒ-51)

## வீதிக்கு புதிய பெயர்

சண்டிலிப்பாய்,டிசெ.28

பண்டத்தரிப்பு, விளாவெளி இந்து மயானத்திற்குச் செல்லும் வீதிக்கு தம்பித்துரை வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு பட்டினசபையின் உறுப்பினராக இருந்து பல பொதுச்சேவைகளாற்றிய அமரர் வ.தம்பித்துரையின் பெயரை இந்த மயானவீதிக்கு சூட்டவேண்டும் என்று பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம், வலிதென்மேற்கு பிரதேச சபைத்தலைவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. பிரதேசசபை இதற்கான அனுமதியை அண்மையில் வழங்கியதை அடுத்து இவ்வீதிக்கு தம்பித்துரை வீதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் சி.மகேந்திரன் தெரிவித்தார். (ம-135)

## வலிகாமம் வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியருக்கு!

வெளி மாவட்டங்களிலிருந்து வலிகாமம் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு வலிகாமம் வலய அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (ம)

## புதிய ஜனநாயகக் கட்சி கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,டிசெ.28

புதிய ஜனநாயகக் கட்சி நடத்தும் "சமாதான முன்னெடுப்புகளும் சவால்களும்" என்ற விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். நகரிலுள்ள சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது. கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் நோர்வே நாட்டின் தொழிலாளர் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ரூனா மரியா பியரிக், கட்சியின் செயலாளர் சி.கா.செந்திவேல், சட்டத்தரணி சோ.தேவராசா ஆகியோர் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவர். (ஒ-135)

## விடைத்தாள் மதிப்பிடும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணி நேற்று நாடு முழுதும் ஆரம்பமானது.

இதற்கென யாழ்.மாவட்டத்தில் 3 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேம்படி மகளிர் கல்லூரியில் 2நிலையங்களும் யாழ் மத்திய கல்லூரியில் ஒரு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று நிலையங்களிலும் சுமார் 750 ஆசிரியர்கள் மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என யாழ் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

மதிப்பிடும் பணிக்கென வெளி மாவட்ட மாணவர்களின் விடைத்தாள்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இங்கு எடுத்துவரப்பட்டுள்ளன. ஜனவரி மாதம் 5ஆம் திகதி வரையும் இந்தப்பணி இடம்பெறவுள்ளது. (ம-10)

## இந்திய யாத்திரை

இந்தியாவின்
திருத்தலங்களுக்கு
யாத்திரை செய்ய
விரும்புபவர்கள்
தொடர்பு கொள்ளவும்.

**சுவாமி விமலாஅம்மா**
**திருப்பதி ஆச்சிரமம்**

பிரதேச செயலக வீதி,
தெல்லிப்பழை.
(12345)

## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

### 150 ஆவது ஆண்டு நிறைவு

### 1852-2002

இரண்டாம்நாள் 28.12.2002 சனிக்கிழமை

★ *அமரர் E.C.A.நவரட்ணராசா அரங்கு* ★

### காலை நிகழ்வு-முற்பகல் 10.00 மணி

| | |
|---|---|
| *தலைமை:* | திரு.வி.பொன்னம்பலம் *(தலைவர், பழைய மாணவர் சங்கக் கிளை, கொழும்பு)* |
| *பிரதமவிருந்தினர்:* | கலாநிதி கருணசேன கொடித்துவக்கு *(மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அமைச்சர்)* |
| *சிறப்பு விருந்தினர்:* | திரு.அ.தில்லைநடராஜா *(மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு)* |
| *கௌரவ விருந்தினர்கள்:* | திரு.வீ.இராசையா *(பதில் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்)* |
| | திரு.என்.ஜெயரட்ணம் *(வடபிராந்திய பிரதி தபால் மா அதிபர்)* |
| | திரு.யு.பி.விஜயக்கோன் *(முன்னாள் அமைச்சர்)* |
| | திருமதி இ.புலேந்திரன் *(முன்னாள் அமைச்சர்)* |

### நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை : திரு.ந.சிவகடாட்சம் (அதிபர்)
- ஆசியுரை : சுவாமி சித்ரூபானந்தா *(ஸ்ரீ சாரதா ஆச்சிரமம், பருத்தித்துறை)*
  வணபிதா.ஜெ.ஜெபரட்ணம் *(புனித மரியாள் தேவாலயம், கோப்பாய்)*
- தலைமையுரை
- ஞாபகார்த்த முத்திரை வெளியீடு
- விருந்தினர் உரை
- நன்றியுரை: திரு.எஸ்.கே.தங்கவடிவேல் *(விழாச் சபைச் செயலாளர்)*
- பட்டிமண்டபம்

"மகிழ்வான வாழ்வுக்கு அவசியமானது, போதுமான பணமா? புரிந்துகொள்ளும் மனமா?"

நடுவர்: திரு.ந.விஜயசுந்தரம் *(ஆசிரியர், கோக்குவில் இந்துக் கல்லூரி)*

அணியினர்

**போதுமான பணமே**

| | |
|---|---|
| திரு.ச.லலீசன் | *(ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)* |
| திரு.மு.சிவப்பிரகாசம் | *(ஆசிரியர், அக்கராயன் மகாவித்தியாலயம்)* |
| திரு.நா.விஜயகுமார் | *(ஆசிரியர், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி)* |

**புரிந்துகொள்ளும் மனமே**

| | |
|---|---|
| திரு.தி.செல்வமனோகரன் | *(மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)* |
| திரு.ப.கணேசன் | *(ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)* |
| திரு.அ.காந்தரூபன் | *(பிரதேச செயலக உத்தியோகத்தர், கோப்பாய்)* |

### மாலை நிகழ்வு பிற்பகல் 4.00 மணி

| | |
|---|---|
| *தலைமை:* | திரு.ந.சிவகடாட்சம் *(அதிபர்)* |
| *பிரதமவிருந்தினர்:* | திரு.து.வைத்திலிங்கம் *(மேலதிக அரச அதிபர், யாழ். மாவட்டம்)* |
| *சிறப்பு விருந்தினர்:* | திரு.க.கேதீஸ்வரன் *(பிரதேச செயலாளர், கோப்பாய்)* |
| *கௌரவ விருந்தினர்கள்:* | திரு.சி.தமிழ்மறவன் *(அரசியல்துறைப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள், வலிகாமம்)* |
| | திரு. ஜீ.ரி.ஞானசேகரவேல் *(பழைய மாணவர் - கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்.)* |

### நிகழ்ச்சி நிரல்

* மங்கல விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* மங்கள இசை (இருபாலையூர் நா.பாலசுப்பிரமணியம் குழுவினர்)
* வரவேற்புரை: திரு.எஸ்.கே.தங்கவடிவேல் *(செயலாளர், விழாச்சபை)*
* ஆசியுரை: திரு.ப.சண்முகராசக்குருக்கள் *(பிரதம குரு, பலாலை கன்னகை அம்மன் ஆலயம்)*
  போதகர் திரு.ஈ.ஏப்ரகாம் *(கானான் தேவாலயம், இருபாலை)*
* வாழ்த்துரை: திரு.வி.சோமசுந்தரம் *(பழைய மாணவர், இளைப்பாறிய பிரதி அதிபர்)*
* தலைமையுரை
* கலைஞர் கௌரவிப்பு
  நாடகக் கலைஞர்கள் : திரு.வே.மகாலிங்கம்
  திரு.எஸ்.பாலசிங்கம்
  பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
* நன்றியுரை : திரு.யோசப்தாவீது *(உபசெயலாளர், விழாச் சபை)*

**கலை நிகழ்ச்சிகள்**

* குழுஇசை : கல்லூரி மாணவிகள்
* இசையரங்கு : செல்வி சுதர்சினி கந்தசாமி B.A.
* நடன அரங்கு : செல்வி தர்சினி தர்மகுலசிங்கம் *(நாட்டிய கலைமணி, யாழ். பல்கலைக்கழகம் அவர்களின் மாணவிகள் வழங்கும் நடனநிகழ்ச்சி)*
* நாடகம் :

* திரு.சி.லட்சுமிபுத்திரன் அவர்களின்
பிரதியாக்கம், நெறியாள்கையில் உருவான
சுதேசிய கலாமன்றம் வழங்கும்
**"வீரத்தின் விளைநிலம்"**

* திரு.எஸ்.பாலாவின்
நெறியாள்கையில் கலைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும்
**"தர்மத்தின் சிம்மாசனம்"**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அமைப்புக்குழுவினர்,
150ஆவது ஆண்டுவிழாச் சபை.

*கல்லூரியை வாழ்த்துகின்றோம்:*

1. பழைய மாணவர்கள், பிரதேச செயலகம், கோப்பாய்
2. காளி கோயிலடி சனசமூக நிலையம், கோப்பாய் மத்தி.
3. கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்
4. வெள்ளெருவைப்பிள்ளையார் சனசமூக நிலையம்

(C/25635)

# வடக்கு இராணுவ, கடற்படைத் தளபதிகளை உடனடியாக மாற்றக் கோருகிறார் மகேஸ்வரன்

## யாழ்ப்பாணத்திலிருந்து பிரதமருக்கு அவசர கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

"வடக்கில் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீளக்குடியமரும் விடயத்தில் முட்டுக்கட்டை போட்டுநிற்கும் வடக்கு இராணுவத் தளபதியையும் வடக்கு கடற்படைத் தளபதியையும் இங்கிருந்து உடனடியாக இடம் மாற்றுங்கள்."

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் அனுப்பிவைத்த மூன்று பக்க அவசரக் கடிதத்தில் இவ்வாறு கோரியிருக்கின்றார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இக்கடிதம் ஒப்படைக்கப்பட்டது.

காரைநகர், பொன்னாலை, மூளாய், மாதகல், அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர் - குருநகர், நாவாந்துறை, கைதடி, தச்சன்தோப்பு, கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு, புன்னாலைக்கட்டுவன், கட்டுவன், மாவிட்டபுரம், காங்கேசன்துறை, வசாவிளான், பலாலி, கீரிமலை ஆகிய 19 பிரதேசங்கள் உட்பட வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் குறித்து அமைச்சர் மகேஸ்வரன் இந்தக் கடிதத்தில் பிரஸ்தாபித்துள்ளார்.

இப்பகுதிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை அவர் இக் கடிதத்தில் விலாவாரியாகக் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் ஜீவனோபாய கஷ்டங்கள் அதில் விவரிக்கப்பட்டுள்ளன.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களும் இப்பிரச்சினைக்கு இதுவரை சாத்தியமான தீர்வைக் காணவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் மகேஸ்வரன், இந்த விடயத்தில் பிரதமரை உடனடியாக - நேரடியாக - தலையிடுமாறு கோரியிருக்கின்றார்.

★ வடக்கு இராணுவ, கடற்படைத் தளபதிகளை வடக்கிலிருந்து உடனடியாக இடம்மாற்றுங்கள்.

★ பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் பிரதமரின் பிரதிநிதிகளாக ஆகக்குறைந்தது மூன்று சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழுவை நேரடியாக அனுப்புங்கள்.

★ இந்த விடயம் குறித்து ஆலோசிக்கவும், பிரதேச மக்களின் நாளாந்த வாழ்க்கையைத் தடை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென இராணுவ அதிகாரிகளுக்கு கட்டளையிடுவதற்குமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை அடுத்த நாடாளுமன்ற அமர்வுதினமான ஜனவரி 7ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுங்கள்.

- இப்படி அமைச்சர் தி.மகேஸ்வரன் தமது கடிதத்தில் கோரியுள்ளார். (ஐ)

## கசிப்பு வைத்திருந்த வழக்கில் நால்வருக்கு ரூ.59 ஆயிரம் அபராதம்!

யாழ்ப்பாணம்,டிசெ.28

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நால்வருக்கு கடந்த திங்கட்கிழமை யாழ். நீதிமன்றினால் 59 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்தவர்களான சண்முகம் கனகலிங்கம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

தர்மராஜா சாந்தினி என்பவருக்கு 10.ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2.ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

நவரட்ணம் ஜெயக்குமார் என்பவருக்கு 10.ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2.ஆயிரம் ரூபா தர்மப் பணமும்-

யாழ்.மடம் வீதியைச் சேர்ந்த வைரவன் சிவசக்தி என்பவருக்கு 20.ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 4 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-10)

## பருத்தியடைப்பில் புதிதாக மாதிரிக் கிராமம் அமைப்பு

காரைநகர்,டிசெ.28

ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு பகுதியில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் உள்ள அரச காணி முதற்கட்டமாக 52 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் 100 குடும்பங்களுக்கு இத்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

இந்தக் காணிகளில் வீடுகள் அமைப்பதற்கென 32 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

ஏனைய 20 குடும்பங்களுக்கும் தாமாகவே முன்வந்து குடிசைகளை அமைத்து குடியேறி வருகின்றனர் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமரும் பொருட்டு வந்துள்ள இப்பகுதி மக்கள் தமது வீடுகளை இழந்த நிலையிலும், சொந்தக்காணிகள் அற்ற நிலையிலும் அவதிப்படுகின்றனர் என்றும் -

இவர்களின் அவல நிலையைப் போக்கும் வகையில் மாதிரிக்கிராமம் அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் - உதவி அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (எ-73)

## பிரதேச செயலர் பிரிவு தோறும் ஐந்து கிராமங்களில் அபிவிருத்தி

வலி.மேற்கு,டிசெ.28

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் பின்தங்கிய ஐந்து கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாகச் சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கையொன்றினை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களை அதிகமாகக் கொண்ட கிராமங்களே இத்திட்டத்தில் இணைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. தெரிவுசெய்யப்படும் கிராமங்கள் சகலதுறைகளிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-175)

## 'காஸ்' விலை அதிகரிப்பு

கொழும்பு,டிசே.28

வீட்டுப் பாவனைக்குரிய 'செல் காஸ்' விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 31 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என 'செல் காஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் 'காஸ்' விலை அதிகரிக்கப்பட்டதே இந்த விலை அதிகரிப்புக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12)

## விதவைகளை மணப்போருக்கு உதவ நடவடிக்கை தேவை!

### மாவை சேனாதிராஜா எம்.பி. வலியுறுத்து

யுத்தத்தால் விதவைகளாகிய பெண்களை மறுமணம் புரிவோருக்கு உதவிகள் வழங்க நடவடிக்கை தேவை. - இவ்வாறு வலியுறுத்தினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

ஆதரவற்ற பெண்களுக்கு தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜா எம்.பி. தனது உரையில் கூறியதாவது:-

'கடந்தகால யுத்தத்தினால் வடக்கு - கிழக்குப் பகுதியில் 40ஆயிரம் பெண்கள் தங்களது கணவரை இழந்துள்ளனர். இவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இவர்களில் அநேகமானோர் இளம் வயதினராக இருப்பதனால் அவர்கள் மறுவாழ்வு பெறவேண்டும். இவர்களை மணம் முடிக்க விரும்பும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, நிலபுலம் ஆகியவற்றை அமைச்சு வழங்கவேண்டும். இதன்மூலம் இந்தப் பெண்கள் தமது வாழ்க்கையைச் சீராக நடத்தமுடியும் - என்றார். (ம-10-8)

## வலிகாமம் கிழக்கு விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம்!

யாழ்ப்பாணம்,டிசெ.28

கோப்பாய், நீர்வேலி பகுதி விவசாயிகள் புகையிலையை பயிரிடுவதில் தற்போது முழு ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

விவசாயிகள் தமது தோட்டங்களை உழுது பண்படுத்துவதிலும் - புகையிலைப் பயிர்களை நடுவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

கடந்தாண்டு இந்தப்பகுதிகளில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் புகையிலைப் பயிரில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக பெரும் நஷ்டமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ-17)

## மாகாண அமைச்சின் ஏற்பாட்டில் தமிழ் இலக்கியப் பெருவிழா - 2002

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு 'தமிழ் இலக்கியப் பெருவிழா - 2002' எனும் ஆய்வரங்கு ஒன்றினை திருகோணமலையில் நடத்தவுள்ளது.

'ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்' என்னும் தொனிப் பொருளில் இந்த ஆய்வரங்கு இன்று முதல் 30ஆம் திகதிவரை தொடர்ந்து மூன்று தினங்கள் புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் ஆய்வும் கருத்தாடலும் ஈழகேசரி பொன்னையா அரங்கில் முற்பகல் 9 மணிக்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

சிரித்திரன் - சிவஞானசுந்தரம் அரங்கில் நடைபெறும் இரண்டாம் நாள் ஆய்வும் கருத்தாடலும் முற்பகல் 9 மணிக்கு கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா தலைமையில் நடைபெறும்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமையிலான ஆய்வும் கருத்தாடலும் எஸ்.டி.சிவநாயகம் அரங்கில் முற்பகல் 9 மணிக்கு மூன்றாம் நாள் நிகழ்வுகளாக இடம் பெறும். (ம-ரி)

## எரிபொருள் நிலுவை ரூ.25 கோடி: ரயில்கள் அனைத்தும் 3 நாள்களில் கட்டையில்!

கொழும்பு,டிசெ.28

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குக் கொடுக்கவேண்டிய சுமார் 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையில் ஆகக் குறைந்தது பத்துக் கோடி ரூபாவையாவது ரயில்வேத் திணைக்களம் இன்னும் மூன்று நாள்களுக்குள் அதாவது எதிர்வரும் 31ஆம் திகதிக்குமுன் செலுத்தவேண்டும். இல்லையேல் ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது.

- இவ்வாறு ரயில்வேத் திணைக்களத்தை எச்சரித்திருக்கின்றது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

ரயில்வேத் திணைக்களம் வருடத்திற்கு சுமார் 110 கோடி ரூபாவுக்கு பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திடமிருந்து ரயில் எஞ்சினுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்கின்றது. இதில் 50 கோடி ரூபாவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி வருடாந்தம் செலுத்துகிறது. மிகுதி ரயில்வேத் திணைக்களத்தின் வருமானத்தின் மூலம் செலுத்தப்படவேண்டும். ஆனால் ரயில்வேத் திணைக்களம் நஷ்டத்தில் இயங்குவதால் அதனைச் செலுத்த முடியாதுள்ளது என ரயில்வேத் திணைக்களத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

இதற்குமுன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடனை மீளச் செலுத்துமாறு வற்புறுத்தியதையடுத்து திறைசேரியினால் சுமார் 30கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. அப்போதும் திறைசேரியிடமே நிதியைப் பெற்றுத் தருமாறு ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

## முன்பள்ளிகளை ஆலயங்களோடு இணைத்து இயக்குவதற்கு திட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

குடாநாட்டில் இயங்கும் சுமார் ஆயிரம் முன்பள்ளிகளையும் அருகில் உள்ள இந்து அல்லது கிறிஸ்தவ ஆலயங்களுடன் இணைப்பதற்கு இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் தம்மைச் சந்தித்த முன்பள்ளி ஆசிரியர்கள் குழுவிடம் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

முன்பள்ளிகளை ஆலயங்களுடன் இணைத்து அந்த ஆலயங்களின் நிர்வாக சபைகளின் மேற்பார்வையில் அவற்றை நடத்துவதற்கும் -

ஆசிரியர்களுக்கான வேதனம், முன்பள்ளி புனரமைப்பு ஆகியவற்றுக்குத் தேவையான நிதியை அந்த ஆலயங்கள் ஊடாக வழங்கவும் -

அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் குறித்து வரும் நாளை ஞாயிற்றுக்கிழமை இந்து குருமார்களையும் மறுநாள் திங்கட்கிழமை கிறிஸ்தவ குருமார்களையும் அமைச்சர் சந்தித்துப் பேசவுள்ளார். (ஐ-3)

## சுதந்திரன் சிறுகதைகள் நாட்டுப்பற்றை வளர்ப்பன

### நூல் அறிமுக விழாவில் எழுத்தாளர் புத்தொளி

வலி.வடக்கு,டிசெ.28

இளைய தலைமுறையினர் மத்தியில் நாட்டுப்பற்றை வளர்ப்பதே சுதந்திரன் சிறுகதைகளின் இலக்கு.

இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் புத்தொளி சிவபாதம்.

சுதந்திரன் சிறுகதைகள் தொகுதி ஒன்று நூலின் அறிமுக விழா அண்மையில் மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா அகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விமர்சன உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எழுத்தாளர் சிவபாதம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரனில் வெளியான சுமார் ஐந்நூற்று இருபது சிறுகதைகளில் இருந்து நூற்றிபொன்பது கதைகள் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டு தற்போது நூலுருப் பெற்றுள்ளன. இவ்வாறு உருவான நூல் புனர்வாழ்வு அமைச்சின் நிதி உதவியுடன் இன்று வெளியிடப்படுகின்றது.

சுதந்திரன் சிறுகதை வெளியீட்டு விழா யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது அந்த விழாவில் ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை என்று சிலர் கோரினர். ஆனால், இன்று தந்தை செல்வா அகத்தில் இந்த நூல் அறிமுக நிகழ்வு இடம்பெறுவதன்மூலம் அந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பல இளைய தலைமுறையினருக்கு அன்று சுதந்திரன் என்ற ஒரு பத்திரிகை இம்மண்ணில் வெளிவந்தது என்பது தெரியாது. நான் 1954ஆம் ஆண்டு எழுதிய ஒரு சிறுகதையில் பெண் போராளியொருவர் நாட்டின் விடுதலைக்[illegible] போராடி மாணித்ததாக எழுதி[illegible].

சுதந்திரன் சிறு[illegible] மக்கள் மத்தியில் நாட்டு[illegible]படுத்துவதற்காகவே அயராது பாடுபட்டன. இன்று இம்மண்ணில் இத்[illegible] வேட்கையில் இளம் தலைமுறையினர் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர் - என்றார்.

தலைமையுரை நிகழ்த்திய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரி தமதுரையில்:-

சிறுகதைகளில் அநேகமானவை அரசியல் பின்னணியையும் மற்றும் சமூக செயற்பாடுகளையும் மையமாக வைத்தே எழுதப்பட்டுள்ளன. அந்த வகையில்தான் சுதந்திரன் சிறுகதைகளும் அன்றுமுதல் காணப்பட்டன.

1947ஆம் ஆண்டுக் காலத்தில் தந்தை செல்வாவும், ஜி.ஜி.பொன்னம்பலமும் இணைந்து இருக்கும்போது வெளியான சுதந்திரன் பத்திரிகை அன்று தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிக்காட்டும் கண்ணாடியாக இருந்தது. அத்துடன் மக்களிடையே அதிக வரவேற்பையும் பெற்றிருந்தது.

தந்தை செல்வா இப்பத்திரிகையை நடத்துவதற்கென தனது சொத்தில் பெரும் பகுதியைச் செலவு செய்தார்.

மேற்படி சிறுகதைகளை யாழ். இலக்கிய வட்டத்தினர் ஐந்து தொகுதிகளாகப் பிரித்து வெளியிடவேண்டும். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்று மேற்படி இலக்கிய வட்டத்[illegible] ரூபா நிதியினை வழங்க[illegible]. ஆனால், நாம் இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை வழங்கக் கூடிய நிலையில் இல்லை - என்றார். ([illegible]-80)

# ஞானோதய அக்கடமி

சங்கத்தானை, சாவகச்சேரி.

A/L 2005 கலை, வர்த்தக, கணித வகுப்புகள்

ஆரம்பம்: 01.01.2003 12.00 (ப.நே.)

ஆசிரியர்குழு

**கலைப்பிரிவு**

Tam. :- திரு.அகிலன்
Hin.m., Hin.Cu. :- திரு.சுரேன்
Log. :- திரு.ஜெயசுரேஸ்
His. :- திரு.பார்த்திபன
Geo. :- திரு.சிவகுமார்
I.Q. :- தவசீசகர்
Eng. :- ஜோதி

**வர்த்தகப் பிரிவு**

Eco :- திரு.லோகசிங்கம், திரு.அன்ரனி
Com. :- திரு.பசில்
Acc. :- திரு.பார்த்திபன்

**கணித, விஞ்ஞான பிரிவு**

Che. :- திரு.அன்பழகன் (அன்பு)
Phy. :- திரு.கருணாநிதி
C.Ma. :- ராஜன்
Bio. :- பிரபல ஆசிரியர்

(12318) - நிர்வாகி


# பல்கலைக்கழக பதிவுகள் ஜனவரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு 2002-2003 கல்வியாண்டில் அனுமதி பெறும் இரு தொகுதி மாணவர்களுக்குமான பதிவுகள் ஜனவரி மாதத்தில் இடம்பெறவுள்ளன.

ஜனவரி 6 ஆம் திகதி மருத்துவம், விவசாயம், முகாமைத்துவம், கலை, இராமநாதன் நுண்கலை ஆகிய பீடங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப் படவுள்ளனர். அதற்கு முன்னதாகவே மாணவர்களின் பெயர்ப் பட்டியலைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (ஐ)


# கணனி கடைக்கு இடம் தேவை

யாழ்.நகரில் ஒரு கணனிக் கடை நடத்துவதற்கு நல்ல வியாபாரப் பகுதியில் தங்கும் வசதி அடங்கிய சுமார் 2000 சதுர அடி விஸ்தீரணமுள்ள இடம் உடனடியாகத் தேவை. தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

Tel.: 0777 734903 (12235)

# தேவை

மில் வேலை தெரிந்த வேலையாள்கள் உடன் தேவை.

தொடர்பு: ***பாலன் மில்***
மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை. (12303)

# தவறிவிட்டன

23.12.2002 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் உடுப்பிட்டிச் சந்திக்கும் வதிரி வீதி, அல்வாய்க்கும் இடையில் செவ்விளனிக் கலர் உடைய ஆண்கள் பேர்ஸுடன் ஒரு தொகைப் பணமும் முக்கியமான பற்றுச்சீட்டுக்களும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

"சிலைன்ஸ் கொம்பிளைக்ஸ்"
வதிரி வீதி, இமையாணன்,
உடுப்பிட்டி.
Tel.: 077-145848, 070-212881 (C/25704)


# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனை பிரதம எழுதுநர்

***திரு.சி.ஜெகபாலன்*** அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி சிவசிதம்பரம் தனலட்சுமி

அவர்கள் (26.12.2002) வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை,*
*ஊர்காவற்றுறை.* (C-25688)
ஊழியர் நலன்புரிச்சங்கம

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 05 - 1937



உதிர்வு 31 - 12 - 1999

## திருமதி சிவலோகநாயகி குணபாலசிங்கம்

திதி.28-12-2002

எம் இதயத்தின் ஒளி விளக்கு!
எம் இல்லத்தின் அன்புக்கோலம்!!
பூவோடும் பொட்டோடும்
இறையடி கலந்தார்!!

அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*உசன்,*
*மிருசுவில்.* (12199)
கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# திருத்தல யாத்திரை

ஆந்திரா, கர்நாடகா, கேரளா, விஜயவாடா, பாண்டிச்சேரி, தென்னிந்திய திருத்தல யாத்திரை 130இற்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களைத் தரிசிக்கலாம். இது 2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் நினைவாக சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடத்தும் யாத்திரை.

*மேல் விபரங்களுக்கு:*
ஸ்ரீ.ஸ்ரீரங்கநாதன்.
தொலைபேசி: 0777 680102
புறப்படும் நாள்: 05.04.2003 (சி-25552)


# நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 03 - 1965



உதிர்வு 28 - 12 - 1998


## திருமதி வசந்தகுமாரி நின்மதிராசா B.A.

(ஆசிரியை, யா/ஆளியவளை சி.சி.த.க.வி.)

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே!*
*அன்பின் திருவுருவே!*
*பாசத்தின் உறைவிடமே!*
*காலமெல்லாம் உன் நினைவில் - எம்முயிர்*
*கலந்து நிற்கத் துடிக்குதம்மா!*

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
*உடுத்துறை வடக்கு,*
*தாளையடி.* (12256)
அன்புக் கணவர், பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



நயினை அமரர்

## இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை

(நெல்லியடி S.V.M. முன்னாள் முகாமையாளர், அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பகால உறுப்பினர்)

அம்பிகை அடியில்: 28-11-2002

அன்பின் திருவுருவே, பண்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே, எமையெல்லாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய தெய்வமே! நீங்கள் எமைவிட்டுப் பிரியவில்லை. எம் உள்ளங்களில் வாழ்கிறீர்கள். உங்களைத் தினமும் நினைத்து நாமும் வாழ்வதுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடிவந்து சகல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்து இறுதிக் கிரியைகளில் பங்கேற்றவர்களுக்கும், இரங்கலுரை நிகழ்த்தி எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், தபால், தொலைத்தொடர்புகள், பத்திரிகைமூலமும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எமது உறவுகளின் இல்லங்கள் சென்று துயர்பகிர்ந்தோருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிபற்றுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (28.12.2002) சனிக்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக்கிரியை, பிரார்த்தனை, மதியபோசன உபசரிப்பிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*2ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (12270)
- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# போஸ்கோ காகிதாதிகள் விற்பனையாளர்

சமாதானப் புத்தாண்டை முன்னிட்டு பாடசாலை அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள் என்பவற்றை மிகக்குறைந்த விலையில் வழங்குவதோடு ஆயிரம் ரூபாவுக்கு (1000/-) மேல்கொள்வனவு செய்வோருக்கு

ஒரு 12 கலர் பெயின்டிங் ஸ்ரிக்

இலவசமாக வழங்குகின்றோம்.

* 31.12.2002 வரையே இச்சலுகை

**போஸ்கோ காகிதாதிகள் விற்பனையாளர்,**
இல.3, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/25701)

நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு



சிறப்புத்தள்ளுபடி விலையில்!

நவநாகரிக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், பட்டுச்சாறிவகைகள், பேபிகவுன் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள் அனைத்தையும்

கிறிஸ்மஸ், புதுவருட அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட



# மிலேனியம் பெஷன்

(பொம்பே பஜார்) (மகாஜன் கபே முன்பாக)

(C/25627) 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# மரபணு ஆய்வுகள் மருத்துவமா? மந்திரமா?

**அண்மையில் இடம்பெற்ற அகவொளி குடும்பவளத் துணை நிலையத் திறப்புவிழாவில் 'மரபணு ஆய்வுகள் மருத்துவமா? மந்திரமா?' என்ற தலைப்பில் அருட்திரு.போல் றோசான் அடிகள் (எல்.பி.எச்.ரோம்) வழங்கிய உரையின் தொகுப்பு இது.**

மரபணு ஆய்வுகள், ஆதாரக் கல ஆய்வுகள் சம்பந்தமாக கத்தோலிக்க திருச்சபையிடமிருந்தும உலக மக்களின் ஒழுக்கத்தை வலியுறுத்துபவர்களிடம் இருந்தும் சர்வதேச மட்டத்தில் பலத்த எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், மனிதனுடைய ஆதாரக் கல ஆய்வுக்கு சம்மதம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இத்துடன் இந்த ஆராய்ச்சிக்கான நிதியையும் ஐ.நா.பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அமெரிக்க வர்த்தக நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல் அமெரிக்க ஜனாதிபதியின் இந்த அறிவித்தலுக்கு கடவுளால் வழங்கப்பட்ட தண்டனையென ஆதாரக் கல ஆய்வுக்கு எதிர்பபுத் தெரிவிப்பவர்கள் கூறினர்.

நாம் கிணற்றுத் தவளைகள் போன்று என்றும் இருக்கமுடியாது. உலகம் இன்று எங்கே போய்க்கொண்டிருக்கின்றது என்பதிலும் கவனஞ் செலுத்தவேண்டும். அதனைப் பற்றி அறிந்துகொள்ளவும் வேண்டும்.

மரபணு ஆதாரக் கல ஆய்வு விடயத்தில் இரண்டு வகையான கருத்துடையவர்கள் எம்மத்தியில் காணப்படுகின்றார்கள். இது ஒரு பாலியல் விடயம் என்று கூறி ஒதுக்கிவிடுபவர்களும், மறுபுறத்தே மனித அபிவிருத்திக்கான மேம்பாடான செயற்பாடு என்று கூறிவரவேற்பவர்களும் காணப்படுகின்றார்கள்.

மனித வரலாற்றை விஞ்ஞான, தொழில்நுட்ப உதவி இன்றி விளங்கிக்கொள்ளமுடியாது. மனித வரலாற்றையும் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியையும் இணைத்துப் பார்க்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகவே மனித வளர்ச்சிக்குத் தடைக்கற்களாக இருந்த மூடநம்பிக்கைகள், மரபுகள் போன்றவையெல்லாம் தகர்த்தெறியப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு விஞ்ஞான வளர்ச்சி காரணம். விஞ்ஞான வளர்ச்சிக்கு மனிதனுடைய பகுத்தறிவு வளர்ச்சி காரணம். மிருக வாழ்க்கையில் இருந்த மனிதன், இயற்கையை தனது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்து ஏவலாளாகப் பயன்படுத்தத் தொடங்கியதும் அவன் நாகரிகமுள்ள ஒரு மனிதனாகப் பரிணமிக்கத் தொடங்கினான்.

இதேவேளை, விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சி அணு ஆயுதம், இரசாயன ஆயுதம், உயிரியல் ஆயுதம்போன்றவற்றை உருவாக்கி பயங்கரமான போர் அச்சுறுத்தல்களை உலக நாடுகளிடையே தோற்றுவித்துள்ளது. இதேபோன்று மனித வாழ்வை இலகுவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட கருவிகள் சுகாதாரப் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகளை உருவாக்குவனவாகவும் அமைந்துள்ளன.

இன்று உலகின் எல்லா நாடுகளிலும் தோன்றியுள்ள வேலையில்லாப் பிரச்சினை, பயங்கரவாதங்கள், அடிப்படை வாதங்கள், குற்றச் செயல்கள், சமூக வாழ்வின் சீர்கேடுகள் ஆகியவை விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் எதிர்மறையான விளைவுகளாக அறிஞர்களினால் நோக்கப்படுகின்றன.

அடிப்படை வாழ்கை நெறிகளான நற்பண்புகளும் ஒழுக்க நெறிகளும் கருத்திற்கொள்ளப்படாமல் விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியே கருத்திற்கொள்ளப்படுகின்றது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் தனக்கு வெளியேயுள்ளவற்றை ஆராய்ந்த மனிதன் தற்போது தனக்குள்ளே மறைபொருளாக இருப்பவற்றை ஆராயமுற்பட்டுள்ளான்.

இயற்கையில் தொடங்கி தனக்கு வெளியேயுள்ள உயிரினங்கள், விண்வெளி, ஏனைய திரவங்கள், நட்சத்திரங்கள் என்று பலவற்றையும் ஆராய முற்பட்டுள்ளான்.

இவை மட்டும் போதாது என்று தனக்குள்ளேயும் திரும்பிப் பார்க்கத் தொடங்கிவிட்டான். உடல் அவயங்கள், உடல் கூறுகள் என்றும் அவன் ஆராய முற்பட்டுள்ளான்.

இதில் நாம் பார்க்கவேண்டியது என்னவென்றால், மனிதன் ஏனைய பொருள்களை ஆராய்வதுபோன்று தன்னைத் தானே ஆராயமுடியுமா? என்பதேயாகும்.

ஏனென்றால், ஒரு மனிதன் மாபெரும் மறைபொருள். அவனுடைய இயல்பு முற்று முழுதாக விளங்கிக் கொள்ளமுடியாத ஒன்று. மருத்துவ ரீதியாக மனிதனுடைய உள்நோக்கம் நல்ல பலனைக் கொடுத்தது.

குளோனிங் முறையின் நோக்கம் மனித ஆய்வுத் தன்மையிலே இருக்கின்ற மறைபொருளை விளங்கிக் கொண்டு புதிய மனிதரை உருவாக்குவது அல்லது மனித இயல்பை கையாளுகின்ற கைங்கரியங்களைக் கற்றுக்கொள்வதாகும்.

விஞ்ஞானம் மனிதனைப் பற்றி ஆராய முன்னரே மெய்யியலும், உளவியலும் அந்த வேலைகளைச் செய்துள்ளன. மெய்யியலாளர்கள் அன்றுமுதல் இன்றுவரை வலிமையாக இருக்கின்ற உடலும், உட்பொருளாக இருக்கின்ற ஆன்மாவும் மனிதனுடைய உட்பொருளாக இருப்பதனால் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லையெனக் கூறிவருகின்றன.

உளவியலும்கூட அன்றுமுதல் இன்றுவரை மனித மறைபொருளை விளங்கிக்கொள்ள முற்படுகின்றது. மனித நடத்தையை ஆய்வுசெய்தவர்கள் அதனை மனப்பகுப்பாய்வு என்று கூறுகின்றார்கள். இவர்கள் மனிதனுடைய நடத்தைக்கோல ஆய்வுகள், கனவு ஆய்வுகள் போன்றவற்றை நடத்தி மனிதனின் உள்மனம் பற்றி பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

மெய்யியலும், உளவியலும் செய்யாத ஒரு வேலையைச் செய்ய விஞ்ஞானம் புறப்பட்டது. மனித மறைபொருளை விளங்கிக்கொள்வதற்காக மனித உடற் கூற்றின் அடிவேர்களாக விளங்குகின்ற மரபணுக்களை ஆய்வு செய்து அவற்றினை மாற்றங்களுக்கு உட்படுத்தி மனித இயல்பை மனித மறைபொருளை முற்றுமுழுதாக விளங்கிக் கொள்ளமுடியுமா என்று ஆராய்ச்சி செய்தது.

இதுவே விஞ்ஞானத் தொழில்நுட்பத்தின் இறுதி ஆய்வாகும். மரபணு ஆய்வுகள் இன்று பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகளுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

1950ஆம் ஆண்டில் முதன்முதலாக பிரிட்டனில் ஒரு மாட்டின் விந்தை எடுத்து வேறு ஒரு பசுவுக்குச் செலுத்தி கன்றொன்றை உருவாக்கினர்.

மிருகங்கள், தாவரங்கள் என்று மரபணு ஆய்வுகளை மேற்கொண்ட மனிதன், நாளடைவில் மனிதர்களில் இத்தகைய மரபணு ஆய்வுகளை மேற்கொண்டு வெற்றிபெறத் தொடங்கினான். இதன்மூலம் விஞ்ஞானத்தில் மேலும் பல வளர்ச்சிப்படி முறைகள் ஏற்பட்டன.

பற்றீரியாக்கள், வைரசுகள் போன்ற பல்வேறு நுண்கிருமிகளையும் இனங்கண்டு கொண்டான். ஆரம்பத்தில் மனித நோய்களுக்குக் காரணம் பிசாசுகளின் பிடி, தெய்வங்களின் கோபம் என்று கூறியவன் தற்போது இத்தகைய மனித நோய்களுக்குக் காரணம் பற்றீரியாக்கள், வைரசுகள் என்பதைக் கண்டுகொண்டான்.

உடல்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற இந்த நுண்ணுயிர்க் கிருமிகளைக் கொண்டே மனித உடல் நோய்களைக் குணப்படுத்தமுடியும் என்பதையும் கண்டுபிடித்தான்.

மனிதனின் இரத்தக் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சத்திர சிகிச்சைகள், உறுப்பு மாற்றங்கள் என்பன மருத்துவத் துறையிலும் மிகவும் இலகுவாக்கப்பட்டன. மரபணு ஆய்வுகள் மருத்துவத் துறையை இன்னொரு வகையிலே வளர்ச்சியடையச் செய்து மனிதனுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தின.

மனிதனுடைய மரபணு ஆய்வு மருத்துவத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலே போய் மனிதனுடைய மறைபொருளையும், அவனுடைய தோற்றத்தைப் பற்றியும் ஆராயமுற்பட்டன.

இதன் விளைவாக 1978ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி பிரிட்டிஷ் வைத்தியர்களான செப்ரோ, எட்வேட் ஆகியோரினால் உருவாக்கப்பட்ட முதலாவது பரிசோதனைக் குழாய்க் குழந்தை பிறந்தது.

இது மனிதனுடைய மரபணு ஆய்வுகள் உடல் கூறு ஆய்வுகளிலே ஒரு முக்கியமான படிக்கல் என்று கூறலாம். இதனால் உருவான இன்னொரு அம்சம் என்னவென்றால் பெண்களுடைய கருப்பைகளை வாடகைக்கு அமர்த்துவதாகும்.

சிசு கருவிலிருக்கும் காலத்துக்கு பெண்களின் கருப்பையை வாடகைக்கு அமர்த்துவது ஒழுக்கத்திற்குப் புறம்பான ஒரு செயல் என்று கத்தோலிக்க திருச்சபை இன்றும் கண்டித்து வருகின்றது. இதனை இன்றுவரை பிறர் ஏற்றுக்கொள்ளவில்லை.

பரிசோதனைக் குழாய்களில் செயற்கையாகச் சேர்க்கப்படுகின்ற இந்தக் கரு முளைகள் இப்படியான வாடகைத் தாய்மாரின் கருவறைகளிலே வைக்கப்படுகின்றன.

இந்நடைமுறை குழந்தை பெற முடியாத மலட்டுத் தன்மையுடைய பெற்றோர்களுக்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இச்செயற்பாட்டில் பலவிதமான மனித ஆளுமைப் பிரச்சினைகள் இருப்பதாக கத்தோலிக்க திருச்சபை சுட்டிக்காட்டி இதனை அடியோடு நிராகரித்தது.

மரபணு ஆய்வுகளின் இன்றைய நிலையை எடுத்துக்கொண்டால் வளர்ச்சியடைந்த மரபணு ஆய்வுகள் இன்று மிகப் பெரிய விந்தைகளை உருவாக்கக் கூடியதாக மாறிவிட்டன. இது ஒரு மனிதனை முழுமையாகப் பிரதிபண்ணக்கூடியதாகவும் ஆதாரக் கலையென்றும் இரண்டு பிரிவுகளாகக் காணப்படுகின்றன.

(குளோனிங்(Cloning) என்பது கிரேக்க மொழியில் உருவான சொல். இது பிரதி பண்ணுதல் அல்லது துண்டாக வெட்டுதல் என்று பொருள்படும்.)

**தொகுப்பு:**
**வலி.வடக்கு செய்தியாளர்**

குளோனிங் என்றால் பாலினக் கலப்பின்றி உயிர் இனங்களைப் பிரதியெடுத்தலாகும். ஓர் உயிரினம் தன்னுடைய இனத்தைப் பெருக்க வேண்டுமாக இருந்தால் இரண்டு விதமான செயற்பாடுகள் இருக்கின்றன.

அதில் முதலாவது கலவி இனப்பெருக்க முறை. அதாவது ஆண், பெண் என்ற இரண்டு உயிரினங்களுக்கிடையே ஏற்படக்கூடிய உறவு. இரணாவது முறையிலே இருவருடைய செயற்பாடுகள் தேவையில்லை.

ஒருவருடைய செயற்பாடே போதுமானதாகும். 'குளோனிங்' முறையில் ஒரு பெண்ணின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அதாவது பெண்ணுடைய ஒற்றைக் கலத்தில் இருந்தோ அல்லது ஓர் உயிர் அணுவில் இருந்தோ அல்லது முழுக் கருவில் இருந்தோ சிசுவை தோற்றுவித்துக் கொள்ளமுடியும்.

அதாவது ஒரு பெண் வேண்டுமாக இருந்தால் ஆணுடன் எந்த வகையான உறவும் கொள்ளாது குளோனிங்(Cloning) முறையின்கீழ் பெண் குழந்தைகளை மட்டும் பெற்றுக் கொள்ள முடியும். ஆண்பிள்ளை வேண்டுமாக இருந்தால் மட்டுமே அவளுக்கு ஓர் ஆணின் உதவி தேவைப்படும்.

குளோனிங் முறையிலே கிடைத்த வெற்றிக்கு உதாரணமாக 1997ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'டொலி' என்ற செம்மறியாட்டினுடைய தோற்றத்திற்கு காரணமாக இருந்தது ஒரு பெண் ஆடு மட்டுமே. இம்முயற்சி ஸ்கொட்லாந்து நாட்டில் இடம் பெற்றது.

டொலி என்ற ஆட்டில் இருந்து மேலும் குட்டிகள் உருவாக்கப்பட்டன. ஆனால் , இதிலிருந்து உருவாகிய பெண் ஆடுகள் சாதாரண ஆடுகளைப் போன்றே காணப்படுகின்றன. ஆனால், ஒரு தாய் ஆட்டில் மட்டும் இருந்தே டொலியென்ற ஆடு உருவாக்கப்பட்டிருந்தது.

இது இனப்பெருக்க முறையிலே ஒரு பாரிய புரட்சியாகக் கொள்ளப்படுகிறது. இச்செயற்பாடு பாலூட்டிகளுக்கு இனப்பெருக்கத்திற்கு ஆண், பெண் இருக்கவேண்டும் என்ற நியதியை மாற்றிவிட்டது.

இதன்மூலம் ஒருவரிடம் மட்டும் இருந்து ஒரு குழந்தை உருவாக முடியும் என்ற கொள்கையையும் புகுத்தி இருக்கின்றது. விலங்குகளுக்கு எந்தமுறை பாவிக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்பட்டதோ அதே முறையை மனிதனும் பாலூட்டியாக இருப்பதினால் பயன்படுத்தி மனித உற்பத்தியைச் செய்யமுடியும் எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கருமுளை பிளவு என்று சொன்னால் ஆண், பெண் உறவிலே உருவாகின்ற இந்தக்கரு முளைகள் எட்டு நாள்களுக்கு ஒரு தடவை பிரிந்து வேறுவேறாக உருவாகும்.

இத்தகைய நேரத்திலே இக்கரு முளைகளை தனித்தனியே பிரித்து எடுத்து எமக்குத் தேவையான அளவு மனிதர்களை உற்பத்தி செய்து கொள்ளமுடியும் என்றுகூறி கருமுளை பிளவு என்ற உத்தியை முன்வைக்கின்றார்கள்.

ஆண், பெண் சேர்க்கையிலே உருவாக்கப்பட்ட கருமுளையினுள்ளே ஒரு உள்ளீடு இருக்கின்றது. அந்தக் கருமுளையை அப்படியே வளரவிட்டால் ஒரு சிசுவாக உருவாகும். இதில் உள்ள கரு 8 நாள் முதல் 12 நாள்களுக்கு இடையில் பிரிந்து வளரும். இதனை கருவிலேயே விட்டால் தனி சிசுவாக உருவாகும்.

பிரிவடையும் சந்தர்ப்பங்களில் இக்கருவைத் தனித்தனியே பிரித்து விட்டால் இவை ஒவ்வொன்றும் தனித்தனிச் சிசுக்களாக உருவாக முடியும். கிட்டத்தட்ட இரட்டைப் பிள்ளைகள் மற்றும் கூடிய பிள்ளைகள் பிறக்கின்ற சந்தர்ப்பங்களும் இவ்வாறே அமைகின்றன.

அடுத்து மையக்கரு மாற்றீட்டு முறையை எடுத்துக்கொண்டால், இதுவும் மனித பிரதியெடுத்தலுக்கு முக்கிய யுத்தியாகக் கொள்ளப்படுகின்றது. இந்த மையக்கரு மாற்றிடலுக்கு முக்கிய கருவியாக உருவாக்கப்பட்ட கருமுளையினுள்ளே இருக்கின்ற உட்கருவை ஒரு ஊசியின்மூலம் வெளியில் எடுப்பார்கள் அதன்பின் அது வெறுங்கோதாக மாறிவிடும்.

எடுக்கப்பட்ட கருவை வேறு ஒரு கலத்தினுள்ளே வைப்பார்கள். அது வைக்கப்பட்ட பின்னர், வளர்ச்சியடைந்து அது வேறு ஒரு கலமாக உருவாகும். கருவிலே இருக்கின்ற முளையை எடுத்து அதனுள் இருக்கும் உட்கலத்தை வேறாக்குவார்கள். அவ்வுட்கருவை எடுத்து பெண்களில் உருவாகின்ற முட்டையை எடுத்து அக்கோதினுள்ளே வைப்பார்கள்.

பெண்களின் முட்டையில் காணப்படுகின்ற வெளிச் சுவர் ஓர் உயிர் அணு வளர்வதற்கு மிகவும் முக்கியமானதாகும். மனிதப் பிரதியெடுத்தலுக்கு ஒரு பெண்ணின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். பெண்கள் இல்லாது 'குளோனிங்' செய்யமுடியாது.

பெண்களுடைய முட்டைச் சுவரினுள்ளே நாங்கள் விரும்பி எடுத்த உயிரணுவின் உட்கருவைப் புகுத்திவிட்டால் அந்த ஆணைப் போன்ற ஒருவர் அங்கு உருவாகின்றார்.

இந்த குளோனிங் முறையிலே நாம் பார்க்கக்கூடிய ஓர் ஆணை உருவாக்கவேண்டும் என்றால் மட்டுமே ஆணின் உதவி வேண்டும். ஆனால், ஒரு பெண்ணை உருவாக்குவதாக இருந்தால் ஆண் அவசியம் இல்லை. இதனையே இன்று பெண் இனவாதிகள் ஆண்துணையின்றிப் பெண்பிள்ளைப் பெறமுடியும் என்றும் கூறிவருகின்றார்கள்.

தொழிற்சாலைகளிலே ஒரே மாதிரியான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதேபோன்று, ஒரு மனிதனையும் இந்த குளோனிங் முறையின்கீழ் பிரதிசெய்துகொள்ள முடியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இன்றுவரை உலக நாடுகளிலே குளோனிங் முறையின்கீழ் மனிதர்கள் உருவாக்கப்படவில்லை என்று வைத்திய ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால், வெகுவிரைவிலே இத்தாலி நாட்டில் இக்குளோனிங் முறையின் கீழ் உருவாக்கப்பட்ட குழந்தை பிறக்கலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த வருடம் இத்தாலி இந்த ஆதாரக் கல ஆய்வை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்துள்ளது.

குளோனிங் முறையின்கீழ் மரபணுக்களையும், மனித உடற்கூறுகளையும் மட்டும்தான் பிரதிபண்ண முடியும். ஆனால், மனிதன் பெற்ற கல்வி அறிவி, அனுபவம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாது. குளோனிங் என்பது மனிதனுடைய உடலோடு மட்டுந்தான் தொடர்புடையதாகும்.

குளோனிங் முறையில் பிறந்து வளருகின்ற குழந்தை எவருடைய கருவில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டதோ அவரின் வயதில் அவருடைய தோற்றத்தைக்கொண்டதாகவே காணப்படும்.

உடல் அவயவங்கள் உருவாக நிறையக் காலங்கள் தேவை. அதாவது மூளை, இருதயம், ஈரல், நரம்பு மண்டலம் என்று பல்வேறு வித்தியாசம் வித்தியாசமான உறுப்புகள் எம்மிடத்தே காணப்படுகின்றன.

இந்த அவயவங்கள் உருவாக அடிப்படையாக இருக்கும் கலங்களே ஆதாரக் கலங்களாகும். ஆதாரக் கலங்கள் ஒரு கருமுளையிலே உருவாகும். ஒரு கருவிலே 16 முதல் 22 வரையான ஆதாரக் கலங்கள் இருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இந்த ஆதாரக் கலங்கள் ஒவ்வொன்றும், எமது உறுப்புகள் ஒவ்வொன்றும் உருவாகக் காரணமாக இருக்கின்றன. ஆதாரக் கலத்தில் உருவாகும் கருவில் இருந்து கருமுளையை உருவாக்கி ஒரு மனிதனுக்கு வேண்டிய அவயங்களை உருவாக்கிக்கொள்ளமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இருதயம் ஒருவருக்கு பழுதடைந்துவிட்டால் அதனை மாற்றுவதற்கு வேறு ஓர் இருதயம் வேண்டுமாக இருந்தால், அவர் தன்னையொத்த ஒருவரிடமிருந்தே பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், ஆதாரக் கல ஆய்வில அத்தகையவரிடம் இருக்கின்ற ஓர் உயிரணுவைப்பெற்று அவருக்கு வேண்டிய இருதயத்தை உருவாக்கிக்கொள்ளமுடியும்.

அதாவது வயது வந்த பெண்களின் கருப்பை ஒன்றிலே உயிரணுவை வைத்து வளரவிட்டு, வளரும் கருவில் இருதயத்தை உருவாக்கும் ஆதாரக்கலம் எதுவென்று கண்டுபிடித்து அதனைத் தனிமைப்படுத்தி வளரவிட்டு இருதயத்தை உருவாக்கிக்கொள்ளமுடியும்.

இதேநேரம், இருதயம் தவிர்ந்த ஏனைய ஆதாரக்கலங்களை அழித்துவிடுவார்கள். இவ்வாறு பெறப்படும் இருதயம் எந்த வகையான பரிசோதனையுமின்றி உரியவருக்குப் பொருத்த முடியும். ஏற்கனவே இதேபோன்று, இருதயம் ஒன்றை இத்தாலியில் உருவாக்கியுள்ளார்கள்.

எங்களுடைய உறுப்புகள் ஏதாவது பழுதடையும் அல்லது நோய்வாய்ப்படும் என்று ஏற்கனவே அறிந்துகொண்டால் முன்னோடியாக எங்களின் உயிரணுவிலிருந்து உரிய ஆதாரக் கலத்தைக் கண்டுபிடித்து உரிய உறுப்பை உற்பத்தி செய்து உறுப்புகள் பாதுகாக்கும் வங்கியில் பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

எமக்குத் தேவையான நேரத்தில் அந்த உறுப்பைப் பெற்றுப் பொருத்திக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இத்தகைய ஒரு சூழ்நிலைக்கு மரபணு ஆய்வுகள் கொண்டுபோய்விட்டுள்ளன. இது மனிதர்களுக்குக்கூடிய பயன்பாடுடையதாகும்.

மலட்டுத் தன்மையுடையவர்களுக்கு இத்தகைய ஆய்வுகள் கூடிய பயன்பாடுடையதாக இருப்பதுடன், மாலைக்கண், ஆஸ்த்மா போன்ற நோய்களுடையவர்கள் உரிய அவயவங்களை மாற்றிக்கொள்வதன்மூலம இத்தகைய குறைபாடுகளிலிருந்து விடுபடக்கூடியதாக இருக்கும். மனித குலத்திற்கு பல நன்மைகள் மரபணுப் பரிசோதனைமூலம் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆனால், கத்தோலிக்க திருச்சபை கூறுவதுபோன்று, ஒழுக்கவியல் ரீதியாக பல பாரிய பிரச்சினைகளையும் இவ்வாய்வுகள் தோற்றுவித்துள்ளன. கருவானது உருவாகும்போது உயிரும் உண்டாகின்றது என்றே கத்தோலிக்கத் திருச்சபை கூறுகிறது.

உறுப்புகள் உற்பத்தியாகும்போது பல உயிர்கள் அழிக்கப்படுகின்றன. இதனால், மனிதனுக்குரிய மாண்பு இல்லாதுபோகின்றது. ஒரேமாதிரியான பலர் உருவாகுவார்கள். இதன்மூலம் தனிமனிதன் என்ற தனித்துவம் இழக்கப்படுகின்றது.

இன்று தாயினுடைய கருவிலே உருவாகியது என்றால் எந்தத் தாயினுடைய கருப்பையிலே உருவாக்

( 12ஆம் பக்கம் பார்க்க)

# உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாண சபை

# வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## "ஆஅவ" கடன் இல. 1846 - SRI(SF)

# கேள்வி கோரல் - இல.02

# குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | MU/NECORD/ED/03 | முல்/சிலாவத்தை இ.த.க. பாடசாலையில்இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 02 | MU/NECORD/ED/04 | முல்/அம்பலவன்பொக்கணை அ.த.க. பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடத்தை நிறைவுசெய்தல் | 1,000 | M9 | 3,000 |
| 03 | MU/NECORD/ED/05 | முல்/புதுக்குடியிருப்பு கணேஷ் வித்தியாலயத்தில் மூன்று 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M6 | 55,000 |
| 04 | MU/NECORD/ED/06 | முல்/கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம் | 1,000 | M7 | 20,000 |
| 05 | MU/NECORD/ED/07 | முல்/ஐயன்கன் குளம் அ.த.க. பாடசாலையில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 06 | MU/NECORD/ED/08 | முல்/தண்டுவான் அ.த.க. பாடசாலையில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 07 | MU/NECORD/ED/09 | முல்/கூழாமுறிப்பு அ.த.க. பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 08 | MU/NECORD/ED/10 | முல்/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 09 | MU/NECORD/ED/11 | முல்/துனுக்காய் அ.த.க. பாடசாலையில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 10 | MU/NECORD/ED/12 | முல்/கோட்டைகட்டினகுளம் அ.த.க. பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 11 | MU/NECORD/ED/13 | முல்/தேறான்கண்டல் அ.த.க. பாடசாலையில் 110'X25' வகுப்பறைக் கட்டடம் மீள்நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 12 | MU/NECORD/ED/14 | முல்/நட்டான்கண்டல் அ.த.க. பாடசாலையில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 13 | MU/NECORD/ED/15 | முல்/வன்னிவிளான்குளம் அ.த.க. பாடசாலையில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 14 | MU/NECORD/ED/16 | முல்/பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் இரண்டு 110'X25' வகுப்பறைக் கட்டடங்கள், அலுவலக அறை மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 35,000 |
| 15 | MU/NECORD/ED/17 | முல்/உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலையில் 120'X25' வகுப்பறைக் கட்டடமும் அலுவலக அறையும் மீள்நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 16 | MU/NECORD/ED/18 | முல்/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டடங்கள் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 40,000 |
| 17 | MU/NECORD/ED/19 | முல்/முருகானந்தா வித்தியாலயத்தில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டடமும் அலுவலக அறை, அலுவலர் அறை மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 40,000 |
| 18 | MU/NECORD/ED/20 | முல்/முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலையில் 120'X25' வகுப்பறைக் கட்டடமும் அலுவலக அறையும் மீள்நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 19 | MU/NECORD/ED/21 | முல்/அரசரட்ணம் வித்தியாலயத்தில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டடமும் அலுவலக அறை, அலுவலர் அறை மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 40,000 |
| 20 | MU/NECORD/ED/22 | முல்/வள்ளிபுனம் அ.த.க.பாடசாலையில் இரண்டு 120'X25' வகுப்பறைக் கட்டடமும் அலுவலக அறை, அலுவலர் அறை மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 40,000 |
| 21 | MU/NECORD/HS/03 | ஒட்டுசுட்டான் சித்த ஆயுர்வேத மருந்தக கட்டட நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 22 | MU/NECORD/ED/04 | ஒலுமடு சித்த ஆயுர்வேத மருந்தக கட்டட நிர்மாணம் | 1,000 | M8 | 20,000 |
| 23 | MU/NECORD/AG/01 | ஒலுமடு கமநல கேந்திர நிலையம் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 50,000 |
| 24 | MU/NECORD/AG/03 | ஒட்டுசுட்டான் கமநல கேந்திர நிலையம் மீள்நிர்மாணம் | 1,000 | M7 | 50,000 |
| 25 | MU/NECORD/LS/01 | முல்லைத்தீவு மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 26 | MU/NECORD/LS/02 | ஒட்டுசுட்டான் மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி மீள் நிர்மாணம் | 1,000 | M6 | 60,000 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் மேற்படி M7இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின்மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

IV. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஒப்பந்த ஆவணங்களை 2003 ஜனவரி 03 இலிருந்து 2003 ஜனவரி 13 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, பந்தி 2இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2003 ஜனவரி 08 முற்பகல் 10.00இற்கு நடைபெறும்.

08. கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.

09. அத்தந்த வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, முல்லைத்தீவிற்கு* 2003 ஜனவரி 27 முற்பகல் 9.30இற்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்படவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு, அல்லது செலவினங்களுக்கு, தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

திருமதி இமெல்டா சுகுமார்
*தலைவர்,*
*மாவட்ட கேள்விச் சபை/அரசாங்க அதிபர்,*
*முல்லைத்தீவு மாவட்டம்.*

(சி-236.23)

# இன்று எங்களுடன் கரும்புலிகள் உணவுண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது

## இதுவே எமது அரசின் சாதனை என்று வெளிவிவகார அமைச்சர் பேட்டி

**தற்போது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பலரும் பலவித கருத்துக்களைத் தெரிவித்துவருகின்றனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையேயான புரிந்துணர்வு குறித்து ஆணித்தரமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ. 'லக்பிம' வார இதழில் வெளியான அவரது பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

*கேள்வி:* ஐ.தே. முன்னணி அரசு பதவியேற்று ஓராண்டு காலம் பூர்த்தியாகியுள்ளது. இந்த ஓராண்டு பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* எமது அரசு ஆற்றிய முக்கியமான பணி யுத்தத்தை நிறுத்தியமையாகும். தடைகள் எதுவுமின்றி சாதாரண மக்களால் எங்கும் போய் வரமுடிகிறது.' போர்க்களங்களில் எவரும் மரணமடையவில்லை. நாட்டின் எப்பகுதியிலும் குண்டு வெடிப்பு எதுவும் இடம்பெறாமல் ஒரு வருடம் கழிந்திருக்கிறது. அதுமட்டுமன்றி, இன்று மொரட்டுவப் பகுதியைச் சேர்ந்த மரத்தளபாட உற்பத்தியாளர்கள் வடக்கு கிழக்குப் பகுதிக்கு மரத்தளபாடங்களை எடுத்துச்சென்று விற்பனை செய்கின்றனர். அன்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் கரும்புலிகள் இரவு உணவையுண்டனர். இன்று கரும்புலிகள் எங்களுடனும் இரவு உணவு உண்கின்றனர். ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் சமாதான வழிக்கு மாறும அமைப்பும், தலைவர்களும் எங்கும் உள்ளனர்.

*கேள்வி:* பொ.ஐ.முன்னணி அரசு 1995இல் போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சு மேற்கொண்ட அனுபவத்தை வைத்து விடுதலைப் புலிகள் அவ்வாறு மீண்டும் செயற்படமாட்டார்கள் என எண்ணுகிறீர்களா?

*பதில்:* சமாதான முயற்சிகள் என பன வெற்றியடைவது போன்று தோல்வியடையவும் கூடும். 1995இல் இடம்பெற்ற பேச்சுகள் மட்டுமல்ல, ஜனாதிபதி பிரேமதாஸா ஆரம்பித்த பேச்சு

### மாற்றார் தோட்டத்திலிருந்து.....

களும் தோல்வியையே கண்டன. அந்த அனுபவங்களுடன்தான் நாம் இம்முறை பேச்சை ஆரம்பித்திருக்கிறோம். 2000ஆம் ஆண்டில் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கிடைத்த சந்தர்ப்பத்தை பொ.ஐ.முன்னணி தவறவிட்டுவிட்டது என்றே என்னால் கூறவியலும்.

*கேள்வி:* அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்குமிடையே தற்போது பேச்சுகள் இடம்பெறுகிறபோதும், விடுதலைப் புலிகள் தமக்கென பொலீஸ், நீதிமன்றம் ஆகியவற்றைப் பேணிவருவதும், அமைப்பிற்கு ஆள் திரட்டல், பயிற்சியளித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அதி உச்சப் பாதுகாப்பு வலயத்தை. அகற்றும் அவர்களது கோரிக்கையின் பேரில் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பாக, பேச்சுகளில் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதைத் தவிர, அவர்கள்மீது அழுத்தம் பிரயோகிக்கும் நிலையில் அரசு இல்லையென விமர்சிக்கப்படுகிறது. இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் போர்நிறுத்த ஒப்பந்தம் ஆகியவற்றினூடாக விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று மோதலைக் கைவிட்டுள்ளது. அண்மையில் அன்ரன் பாலசிங்கம் கட்டுரை ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் என ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி, அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும்விதத்தில் தீர்வுக்கான ஒரு திட்டம் முன்வைக்கப்படுமானால், தனி இராச்சியக் கோரிக்கையைக் கைவிட்டு ஒன்றிணைந்து செயற்படத் தாம் தயாராகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இப்படியிருக்கும்போது எதுவுமே நடைபெறவில்லையென எப்படிக் கூறமுடியும்?

*கேள்வி:* இறுதித் தீர்வு எட்டப்படுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் நிராயுதபாணிகளாக்கப்படவேண்டுமென அண்மையில் முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியுள்ளாரே? இது தொடர்பாக அரசு என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது?

*பதில்:* ஒருபோதும் நடைமுறைப்படுத்தமுடியாத பைத்தியக்காரத்தனமான வேண்டுகோள் அது. முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மாக்கிரட் தட்சர் ஆயுதங்களைக் கைவிட்டு, பேச்சுக்கு வருமாறு அயர்லாந்துக் கிளர்ச்சியாளர்களுக்குக் கூறினார். அது எவ்வித பலனையும் அளிக்கவில்லை. ஆனால், தற்போதைய பிரதமர் ரொனி பிளேயர் யுத்தத்தில் ஈடுபடும் வேளையிலேயே நாம் பேச்சிலும் ஈடுபடுவோமெனக் கூறினார். அந்த நிலையில் அம்முயற்சி வெற்றியளித்தது. நாம் யதார்த்தத்தை மறந்து ஆகாயக் கோட்டை கட்டுவதில் பயனில்லை. பேச்சு முன்னெடுத்துச் செல்லப்பட்டு தீர்வு முயற்சி வெற்றியளிக்கும் வேளையில் இதோ இப்போது ஆயுதங்களைக் கீழே வையுங்கள் எனக்கூறுவதற்கு எமக்குச் சந்தர்ப்பம் கிட்டும். தற்போது நாம் அவர்களின் துப்பாக்கிகள் ஒலிப்பதை நிறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* பேச்சு தோல்வியடைந்து, மீண்டும் யுத்தம் தொடங்குமானால் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்குமென விடுதலைப் புலிகள் கூறுகின்றனரே?

*பதில்:* இப்பேச்சுகள் தோல்வியடைய வேண்டுமெனப் பிரார்த்திப்போர் சிலர் நம்மிடையே உள்ளனர். நாட்டின் நன்மை கருதி, பேச்சுகளில் வெற்றிபெற எமக்கு உதவுங்கள் என அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

*கேள்வி:* ஜனாதிபதி உட்பட பொ.ஐ.முன்னணியினர் எடுத்துக்காட்டும் குறைபாடுகளைக் கணக்கில் கொள்ளாது அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சமாதான முயற்சிகளை விரும்பாதவர்கள் கூறுகிறார்கள். ஜனாதிபதியும் அவ்வாறான குற்றச்சாட்டையே சுமத்தி வருகிறார். உண்மை நிலை என்னவெனக் கூறுவீர்களா?

*பதில்:* ஜனாதிபதி மட்டுமல்ல, வேறு எவராயினும் சுட்டிக்காட்டும் குறைபாடுகள் பற்றி நாம் கவனத்தில் கொள்கிறோம். ஆனால், பொதுமக்கள் கதிர்காமர்களுக்கல்ல, எமக்கே ஆணை வழங்கியிருக்கின்றனர் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

*கேள்வி:* நோர்வே நாட்டின் தூதுவருடாக அரசு, விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அதி சக்திவாய்ந்த ஒலிபரப்புச் சாதனங்களைப் பெற்றுக்கொடுத்தமை இன்று விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பாக அரசுமீது குற்றஞ்சாட்டப்படுகிறது. இது எவ்வாறு நேர்ந்தது?

*பதில்:* இது ஒரு சின்ன விஷயம். இதுபற்றிக் கலவரமடையத் தேவையில்லை. ஆனால், ஒருசாரார் இதனைப் பெரிதுபடுத்த முயல்கின்றனர். நான் ஊடகத்துறை அமைச்சராகவிருந்த வேளையிலேயே தனியார் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்திலே அவ்வாறான ஒலிபரப்புச் சேவை இருந்தது. அதிசக்தி கொண்ட சாதனங்கள் என நீங்கள் குறிப்பிடுவது பொய்யான செய்தியாகும். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வழங்கப்பட்ட சம்பவத்தை மட்டும் எதற்காகச் சுட்டிக்காட்டிக் கூறவேண்டும். அதற்கான அனுமதியை அவர்கள் எம்மிடம் கோரியதை எமது வெற்றியாகக் கருதக் கூடாதா? எங்கள் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒலிபரப்புச் சேவை நடைமுறைகளுக்கு அமைய, எமக்கு கட்டணம் செலுத்தப்படவேண்டுமென்ற நிபந்தனையுடனேயே நாம் அவர்களுக்கு அனுமதியளித்துள்ளோம். இன்றைய நவீன உலக வசதிகளுடன ஒப்பிடுகையில் அது வானொலிப்பெட்டியிலிருந்து பெறும் ஓசை போன்றதே. ஓர் இசை நிகழ்ச்சிக்கு ஒலிபெருக்கிச் சாதனத்தை உபயோகிக்க வழங்கப்படும் அனுமதிபோன்ற விடயமே அது.

*கேள்வி:* ஆனாலும், இப்போது ஒரு 'கெரில்லா' அமைப்பாகச் செயற்படும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இவ்வாறான உபகரணங்களை வழங்குவது தொடர்பாக நீங்கள் கூறுவது போன்று இலேசான விடயமாகக் கருதமுடியாது அல்லவா?

*பதில்:* கெரில்லா அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அந்த உபகரணங்கள் வழங்கியதாகத் தாங்கள் கூறிக்கொண்டாலும், இப்போது அவர்கள் கெரில்லாக்களின் உபகரணங்களை ஒருபுறம் போட்டுவிட்டல்லவா எங்களுடன் பேச வந்திருக்கிறார்கள். எனவே, நாங்கள் அவர்களை சாதாரண விதத்தில் கருதுவோம். அதைவிடுத்து. இவர்கள் புலிகளல்லவா? என்றவிதத்தில் நோக்குவது தவறானது.

*கேள்வி:* தற்காலிகமாக அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டுள்ள போதும் இப்போதும் அவர்கள் கெரில்லா இயக்கமாகச் செயற்படுவதால் அவர்களிடமுள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலர் ஆர்மிடேஜ் ஒஸ்லோ நகரில் கூறியுள்ளாரே?

*பதில்:* விடுதலைப் புலிகள்

**தமிழில்: வீஎஸ்ரீ**

அமைப்பு வன்முறையைக் கைவிடுவதாகப் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டுமெனவே ஆர்மிடேஜ் கூறியுள்ளார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் "அதற்கும் வேளை வர வேண்டும். அவ்வாறான வேளை வருவதற்காக நாம் வேகமாகச் செயற்படுவோம்" என விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

*கேள்வி:* இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதுடன் புதிய அரசமைப்பு தயாரிக்கப்படுமென அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் கூறியிருந்தார். ஆனால், அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுமென அவர் விளக்கமளிக்கவில்லை. அது தொடர்பாக அரசின் திட்டம் எவ்வகையில் அமைகிறது?

*பதில்:* எல்லாவற்றுக்கும் முதலில், அவ்விதமான அரசமைப்பு யோசனைக்கு விடுதலைப் புலிகள் அமைப்புத் தெரிவிக்கும் கருத்துக்கள் எவை என்பது பற்றி அறியவேண்டும். தனியான இராச்சியமொன்று அவசியமில்லையென அவர்கள் கூறுகிறார்கள். அப்படியாயின் அவர்களுக்கு அவசியமானது என்னவெனத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும். எதிர்வரும் காலத்தில் இடம்பெறவுள்ள பேச்சுக்களில் அவர்களது விருப்பம் எவையென எம்மால் அறியக் கூடியதாய் இருக்கும்.

இப்போது பாருங்கள், விரிவான வகையில் எம்மிடமும் கருத்துக்கள் கேட்டறிந்து 2000ஆம் ஆண்டில் பொ.ஐ.முன்னணி அரசு புதிய அரசமைப்பு யாப்பைத் தயாரித்தபோதும் விடுதலைப் புலிகள் அமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பினதும், பௌத்த மதபீடங்களினதும் கருத்துக்களைக் கேட்டறியாமலேயே அதனை பொ.ஐ. முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தமையினால் நாம் அதனை எதிர்த்தோம்.

*கேள்வி:* அவ்வாறு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் அரசமைப்பு மசோதா நிறைவேற்றப்படவேண்டுமாயின் நாடாளுமன்றத்தின் முக்கிய எதிரணியினரின் ஒத்துழைப்பைப் பெறவேண்டியுள்ளது. இவ்வாறான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள அரசு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்போகிறது?

*பதில்:* எனது கருத்துப்படி அம்மசோதாவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்ளவேண்டும். எனவே, அதற்காக எதிரணியின் ஆதரவும் பெறப்படல் வேண்டும். அதேபோன்று அதற்குப் பொதுமக்களின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.

*கேள்வி:* அதற்காக அரசுக்கும், ஜனாதிபதி உட்பட பொ.ஐ.முன்னணிக்குமிடையே இச்சமாதான நடவடிக்கைகள் மற்றும் வேறு நடவடிக்கைகள் தொடர்பாகவும் சுமுகமான உறவு பேணப்படவேண்டியுள்ளது. ஆனால், தற்போதைய நடவடிக்கைகளை அவதானிக்கும்போது அவ்வித சுமுகநிலை நிலவுவதாகத் தென்படவில்லையே? தொடர்பாக ஜனாதிபதி ஸ்ரீலசுகட்சியின் கொள்கை அடிப்படையிலேயே செயற்படுகின்றார். அவர் தனது அரசின் ஆட்சிக்காலத்தில் வெண்தாமரை இயக்கத்தை நடைமுறைப்படுத்தியும் மற்றும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றிருப்பினும், அவை எமது குறிகோள்களுக்குச் சமானவையாகவே தோன்றின. ஆயின், இன்று அவரைச் சுற்றியுள்ள வெண்தாமரை இயக்கத்தை நடைமுறைப்படுத்திய ஒரு கூட்டத்தினர் தற்காலிக அரசியல் இலாப நோக்குடனேயே செயற்படுகின்றனர். அவர்கள் ஜனாதிபதியைச் சிக்கலில் மாட்டிவிடவே எண்ணுகின்றனர்.



*கேள்வி:* அதாவது ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்புகள் கொண்டுள்ள ஒருசிலர் ஜனாதிபதிக்கு எதிராக சதிபுரிவது போன்று செயற்படுவதாகக் கூறுகிறீர்களா?

*பதில்:* நான் அவ்வித அர்த்தத்தில் கூறவில்லை. அவர்களது நடவடிக்கைகள் ஜனாதிபதியின் திட்டங்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக் கூடியவையெனக் கூறுகிறேன். அவற்றால் சிரமத்துக்குள்ளாவது ஜனாதிபதியே.

*கேள்வி:* தாங்கள் இவ்விதம் கூறுகிறீர்கள். ஆனால், சமாதானப் பேச்சுகளுக்கு ஜனாதிபதியின் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக்கொள்ளுமாறு பொ.ஐ.முன்னணி பலதடவை வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனால், அரசு அக்கோரிக்கைக்கு இதுவரை எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லையே?

*பதில்:* நான் முன்னர் கூறியது போன்று இதற்கான மக்கள் ஆணை எமக்கே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கி உதவினால் அது பாராட்டக்கூடிய விடயம். எங்கள் அணியில் ஜனாதிபதியின் தரப்பிலிருந்தும், யாராவது ஒருவரைச் சேர்த்துக்கொள்வது பலன் தராது என்பது எனது அபிப்பிராயம். அது குற்றம் கண்டுபிடிப்பதாய் முடியுமேயொழிய முயற்சிகளில் முன்னேற்றம் தராது.

*கேள்வி:* இனப்பிரச்சினை என்ற துடுப்பாட்டப்போட்டியில் நாம் வெற்றி பெற மீந்துள்ள கடைசி ஓவரின் கடைசிப் பந்துவீச்சு இது எனவும் அக்கடைசிப் பந்து வீச்சில் 'சிக்சர்' அடித்துப் போட்டியில் வெற்றி பெறுவோம் எனவும் ஐ.தே.கட்சியின் 48 ஆவது மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் கூறியுள்ளார். அக்கடைசிப் பந்து வீச்சில் பிடிகொடுத்து ஆட்டத்தை இழக்கவும் வாய்ப்புண்டு அல்லவா?

*பதில்:* (சிரித்தபடியே) உண்மையில் நீங்கள் கூறியவிதத்தில் இப்போட்டி முடிவு அமையவேண்டுமென விரும்பும் கூட்டத்தினரும் நம்மிடையே இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால், நாம் எதிர்கொண்டு அடிக்கும் அக்கடைசிப் பந்து வெறுமனே சாதாரண ஆறு ஓட்டங்களைப் பெற்றுத் தரும் அடியாக இருக்கப்போவதில்லை. நாம் அடிக்கும் அப்பந்து பார்வையாளர் கட்டடத்திற்கு மேலாகச் செல்லும் அல்லது அவ்விளையாட்டரங்கத்துக்கு வெளியே வெகு தூரத்துக்கப்பால் சென்று விழுந்து மிகத்திறமான ஆறு ஓட்டங்களைப் பெற்றுத் தருவதாக அமையும்.



**இனிய இதயங்கள் என்ற அமைப்பினர் கடந்த தீபாவளித் தினத்தன்று கைதடி முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு - அவசியமான - பொருள்களை அன்பளிப்புச் செய்தனர். அதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் வாழ்வக அமைப்பின் உப தலைவர் ஆர்.ரவீந்திரன் உரையாற்றுவதை படத்திற்காணலாம். இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் சி.விக்னராசா மற்றும் கைதடி முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி உட்பட பல பிரமுகர்களும் அருகில் காணப்படுகின்றனர். (ம)**

# கிராமோதய சபைகள் மீண்டும் அமைக்கப்படும்?

வலி.மேற்கு,டிசெ.28

நாடு பூராகவும் மீண்டும் கிராமோதய சபைகளை மீளசெயற்படுத்துவதற்கு தற்போதைய அரசு ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது.

கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சும் இலங்கைத் தேசிய அரசசார்பற்ற நிறுவன சபையும் இணைந்து அண்மையில் திருகோணமலையில் ஏற்பாடு செய்த பயிற்சிப் பட்டறையில் கிராமோதய சபைகளை மீள இயக்குவது தொடர்பாக ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது. எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எவ்வாறு செயற்படுத்துவது என அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வின்போதே கிராமோதய சபைகளை மீள செயல்படுத்துவதன்மூலம் மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளை மக்கள் மூலமே இனங்காண்பதற்கு கிராமோதய சபைகள் பெரிதும் உதவமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

கிராமோதய சபைகளில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயல்படுவதனால் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கிராமோதய சபைகள் பெரும் பங்கினை வகிக்கமுடியும் எனவும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமோதய சபைகள் நாடு பூராவும் அடுத்த ஆண்டு தொடக்கம் செயற்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

(ஓ-175)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

MD 90 Model 20. (23000 கி.மீ. ஓடியது) LML 125 CC (15000 கி.மீ. ஓடியது) மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு 49, சட்டநாதர் கோயில் வீதி, யாழ்ப்பாணம் (இளங்கலைஞர் மன்றம் முன்பாக). (12346)

வளர்ப்பு கலர்மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12229)

வெள்ளை, கறுப்பு, நரை பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நடராசா, செல்வநாயம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பலாலிறோட் சந்திப் பிள்ளையார் கோயில் அருகில்). (12333)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11714)

புறொயிலர், கல்பேட், சேவல் என்பன விற்பனைக்குண்டு. வேண்டிய அளவுகளில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (பூங்கனிச்சோலைக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில்). (12138)

Broilers, சேவல், கல்பேட்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து தரப்படும். தொடர்பு: சே.கிருஸ்ணகுமார், விதானை வளவு, பொன்னாலை வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக). (12304)

## வீடு விற்பனைக்கு

நல்லூர், செம்மணி வீதி, நாயன்மார்கட்டுச் சந்தியிலிருந்து பாரதி வீதியில் 2 1/2 பரப்புக் காணிக்குள் புதிதாக அமைக்கப்பட்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.ராசகிளி, இல.16, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, அரியாலை. (12261)

## உடன் விற்பனைக்கு

ஜேசி இனத்தைச் சேர்ந்த ஒன்பது மாதம் சினைப்பசு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 57/30, ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கி முன்ஒழுங்கை, யாழ்ப்பாணம். (12326)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

காவலுக்குரிய, அழகான Pedigreed Great Dane (Cross), Pedigreed Dobermann Pincher நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12349)

## கோழி தடுப்பு மருந்து

Gampura, Raniket மருந்துகள் ஞாயிற்றுக்கிழமை காலையும் C.R.D. சளி மருந்து புதன்கிழமை காலையிலும் வழங்கப்படும். தொடர்பு: இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11909)

## கணிதம், ஆங்கிலம்

ஆங்கிலம் 3-11 வகுப்புகள் 20 வருட சேவையுள்ள பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. தொடர்பு: அ.ஞானசம்பந்தன், (B.Sc.) 67, கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (12348)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவரும், 1970ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல. 1736, C/o உதயன். (12287)

லண்டன் பிரஜாவுரிமை உடைய பொறியியலாளருக்கு (மகம்) 27 வயதிற்குட்பட்ட டாக்டர் அல்லது டாக்டருக்குப் படித்துக்கொண்டிருக்கும் மணமகள் தேவை. தொடர்பு: 021-222 3265 (12313)

## திருமண சேவை

1982, ரோகிணி, செவ்வாய் 4, கௌரவ குடும்ப, படித்த, அழகான மணப்பெண்ணுக்கு U.K.இல் மணமகனை எதிர்பார்க்கின்றோம். மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: துரை விமலா, Red.No.580, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (12335)

## தவறிவிட்டது

3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறையைச் சேர்ந்த விரமுத்து தனலக்ஷ்மி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.827121215V)யும், விசேட அடையாள அட்டை (இல.0901005494)யும் யாழ். நகரப் பகுதிக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சமுத்திரா ரேடேஸ், இல. 141, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (12329)

214, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குணலேந்திரன் பதுமராணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.605742777V), விசேட அடையாள அட்டை (இல. 550921103) என்பன சிறிய பேர்ஸுடன் 25-12-2002 புதன்கிழமை நாச்சிமார் கோயிலுக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொலைபேசி 222-2044, 222-2695 (12325)

## தொடர்புகொள்ளவும்

நேற்றுமுன்தினம் (26.12.2002) வியாழக்கிழமை ஒழுங்கை இராணுவத்தின் சோதனை நிலையத்தில் உதவிசெய்யும் பொருட்டு என்னிடம் இருந்து சதுரவடிவான, துணி அடிக்கப்பட்ட, மரத்தால் செய்யப்பட்ட, 5 பிறேம்களை வாங்கியவரைத் தவறவிட்டுவிட்டேன். அன்னார் தயவுசெய்து *றிச் ஒப்செற் பிறின்டேர்ஸ், இல.75, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்* என்னும் முகவரியில் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

மு.சதீஸ்குமார்
சூராவத்தை, சுன்னாகம்.
T.P.: 070 - 212800 (12362)

## தேவை

1. கணக்காளர் 2. பில் கிளாக்

வயதெல்லை: 22 முதல் 50 வரை

தொடர்பு: **ஜமுனா ஸ்ரோர்**
தம்ரோ தளபாட நிலையம்,
நெல்லியடி.
T.P.: 0777 730332 (12361)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் உதிப்பு 28 - 01 - 1917
விண்ணில் ஒளிர்வு 28 - 11 - 2002

### திருமதி தாமோதரம்பிள்ளை இராசம்மா

*(முன்னாள் டெனியாய பிரபல வர்த்தகர்)*

*தரணியில் எம்மைப் பண்புடன் வாழவைத்த தாயே!*
*தனிமையில் எம்மை வாடவைத்துச் சென்றது விந்தையே!*
*பிரியமுள்ள எங்கள் அன்புத் தாயே!*
*உங்கள் பிரிவால் நாம் ஏங்கித் தவிக்கின்றோம் நித்தமே!*
*கண்ணை இமை காப்பதுபோல் காத்து நின்ற எங்கள்*
*உயர்வுக்கு வழிகாட்டிய அன்புள்ள ஆச்சியே!*
*உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

புதியகுடியிருப்பு, உரும்பிராய். - மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: க.சிவலிங்கம், சிவலிங்கம் மோட்டோர்ஸ் (12363)

## வீதிகளில் குறியீடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.28

யாழ்.நகரப் பகுதியின் முக்கிய வீதிகளில் வீதிக்குறியீட்டு அடையாளங்கள் நடப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் தனியார் விளம்பர நிறுவனம் ஒன்று இவ்வீதியின் குறியீட்டு அடையாளங்களைப் பொருத்திவருகின்றது.

இதன்மூலம் பொதுமக்கள் வீதிகளை இலகுவில் இனங்காணக்கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

## மரபணு ஆய்வு....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது. அதாவது சொந்தத்தாயா? வாடகைக்கு அமர்த்திய தாயா? பரிசோதனைக் குழாயா? என்ற கேள்விகள் எழுகின்றன.

மனிதர்கள் இவ்வாறு உருவாக்கப்படுவார்களேயானால், பிறப்பில் முக்கியத்துவம் போய் மனித உற்பத்தி என்பது ஓர் ஆலை உற்பத்தியாக மாறிவிடும். அதுவே, பிறப்புக்கு இருக்கின்ற மதிப்பு, கண்ணியம் இல்லாது போய்விடும்.

மரபணு ரீதியான ஆய்வுகள் மனித குலத்திற்கு வாழ்வுகொடுக்கக்கூடியவை. அதேநேரம், அவை மனிதனுடைய மாண்புகளையும் அழித்துவிடக்கூடியது.

குளோனிங் முறைபற்றி சந்தோஷிக்க மக்களின் வேதாகம நூலான பைபிளிலேயே கூறப்பட்டுள்ளன. ஆதாமின் விலா எலும்பிலிருந்து தான் ஏவாள் உருவாக்கப்பட்டதாக இதில் சற்று மாறுபாடு காணப்படுகின்றது. ஆணிலிருந்து பெண் உருவாக்கப்பட்டதாக.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன சில காத்திரமான விளைவுகளை மனித குலத்திற்குத் தந்துள்ளன அதேவேளை, மிகவும் பாரதூரமான அழிவுகளையும் மனித வாழ்விலே ஏற்படுத்தியுள்ளன.

இயற்கையைப் பழக்கப்படுத்தி ஏவலாளாக பயன்படுத்தக் கற்றுக் கொடுத்த விஞ்ஞானம் இயற்கையை அழிக்கின்ற ஒரு கருவியாகவும் இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. ★

## இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடா நிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப் பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.*
*இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).*
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00மணிவரை
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (12367)

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

We Serve

நடத்தும்

**இலவச மருத்துவ/கண்பார்வை பரிசோதனை முகாம்**

*காலம்:-* நாளை (29-12-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிமுதல்

*இடம்:-* சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் (ஆரம்ப பிரிவு) தாவடி வீதி, சுதுமலை.

**சேவையாற்றவுள்ள மருத்துவக்குழு:**

லயன் வைத்திய கலாநிதி இராஜேந்திர பிரசாத் M.B.B.S.
*(முன்னாள் பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

லயன் வைத்திய கலாநிதி K.இரத்தினசிங்கம் M.B.B.S.
*(சிரேஷ்ட வைத்திய அதிகாரி, யாழ். போதனா வைத்தியசாலை)*

**கண்பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்கள்:**

யாழ். பிரபல S.M.பெர்னாண்டோ எம்துரானந்தர்

இம்முகாமில் மருந்துகளும் மற்றும் வசதி குறைந்தவர்க்கு மட்டும் தேவைப்படும் மூக்குக்கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்படும். நீரிழிவு பரிசோதனையும் மேற்கொள்ளப்படும்.

லயன் எஸ்.சிவன்நேசன், கழகத் தலைவர் (C/25710) லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, *சேவை இணைப்பாளர்.*

## நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 19 - 09 - 1941



ஆண்டவன் திருவடியில் 07 - 01 - 2001

### பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா

(Wharf Clerk Special)
Harrison Shipping (Pvt) Ltd. Maharaja Group.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

*அன்புக்கோர் அனிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்*
*அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே!*
*ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்*
*ஆறாது எங்கள் துயர்.*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*60, பிரப்பங்குளம் வீதி, கைதொரவண்ணை, யாழ்ப்பாணம்.* (12256) அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### செல்வரட்ணம் ஜெயராஜா (வினோத்)

மானிப்பாய், முதலாம் குறுக்குத்தெரு, இணுவில் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வரட்ணம் ஜெயராஜா (வினோத்) அவர்கள் 25.12.2002 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் செல்வரட்ணம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்புப் புதல்வனும் உடுவில் அனிற்றாவின் அன்புக் கணவரும் டினேஸ், குகாஜினி, வினோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் எஸ்.ஜே.செல்வராஜா (ஜே.பி.), எஸ்.டி.யோகராஜா, எஸ். ஜே.சந்திரராஜா, எஸ்.நேசராஜா, எஸ்.சீ.ஆனந்தராஜா ஆகியோரின் சகோதரனும் ஏஞ்சலின் மகேஸ்வரி, உதயமதி, சாந்தா, உதயகுமாரி, இந்திரா ஆகியோரின் மைத்துனரும் கிறிஸ்ரி சைலஜா லக்ஷன், றொஜினோல்ட், கிருபா, ஜோய், வினோஜினி, ஸ்ரீபன், ஜஸ்மின் ஆகியோரின் சிறிய தந்தையாரும் செல்ரன் ரூபேந்திரனின் மாமனாரும் திருமதி ஆசீர்வாதம் - சாமலாதேவியின் மருமகனும் கிறிஸ்ரி, பிராங்கிலின், ஜீவா ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-12-2002) சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு மானிப்பாய் தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் குறுக்குத்தெரு, இணுவில் வீதி, மானிப்பாய்.* (12370) தகவல்:- எஸ்.ஜே.செல்வராஜா (சமாதான நீதிவான்)

# இந்த வார இராசி பலன்

## 29.12.2002 ~ 04.01.2003

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| புத. ▲ சூ. | கேது சந். | செவ். வெள். | |

**மாற்றம்:**

**29.12.2002இல் சுவாதி - சந்திரன் துலாம் இராசியில் நிற்கும். 01.01.2003இல் வெள்ளி விருச்சிக இராசிக்கு மாறும்.**

**கருத்துமோதலுடன் பேச்சுத் தொடரும். உலகம் நியாயம் கேட்கும். மக்கள் கலாபக தென்பகுதி மதத் தலைவர் கள் வகுப்புவாதத்தைத் தூண்டுவார்கள். இந்தியா மறைமுகத் தாபம் போடும். அரசியல்வாதிகள் இரண்டுபட்டு பேரம்பேசுவர். இந்தியா மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்கும்.**

**மத்தியகிழக்கில் யுத்தமேகம் கருக்கூடும். அமெரிக்கா பிடிவாதமாக ஈராக் மீது போரைத் திணிக்க முற்படும். அழிவுகள் தொடரும். பதற்றநிலை உருவாகலாம். ஐ.நா. அடிக்கடி கூடும் நிலை உருவாகும். அத்திலாந்திக், பசுபிக் சமுத்திர நாடுகளில் பதற்ற நிலை உருவாக இடமுண்டு. அரபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றம் உருவாகும் என கிரக நிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

வெடிகள், குண்டுகள் ஏன் மலிகின்றன. நாட்டின் பொருளாதாரத்தையும், மனித உயிர்களையும் அழிக்கவா? என மக்கள் கேட்கின்றார்கள். ஆனால், ஆக்கத்திற்காக தொழில் ஸ்தானத்தில் பலத்த போராட்டம் நடத்துவீர்கள். கவர்ச்சியான பேச்சு, அரசியல் கட்சியாளர்களின் உதவிகள், தந்தை, மாமன் வழியினரின் உதவிகள் கிடைக்கும். பொருளுக்காக ஓடியாடித் திரிவீர்கள். குடும்பத்தினருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாம். மேலதிகாரிகளை மதிக்காத மனநிலை தோன்றும். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### இடபம்

ஒரு வீட்டில் பல குறைகள் இருக்கலாம்; அதனால், அந்த வீட்டிலுள்ளவர்களுக்கு குறை, குற்றங்கள், கஷ்டங்கள் வந்து தடுமாற்றம் தூரவல்ல பலன் நடக்க இடமுண்டு. டெங்குக் காய்ச்சல் வந்து மரணித்தாலும் அதுவும் விதிதான். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டி ஏற்படும். சிலர் நஞ்சு வைப்பார்கள். மேலதிகாரிகள் கோவிப்பார்கள். புடைவை, நகை வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்கும். மறதி ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

காதலுக்கு கண் இல்லை என்பார்கள். அதில் எவ்வளவு உண்மை உண்டு என்பது காதலர்களுக்கு மட்டுமா தெரிகின்றது? அவர்களைப் பார்க்கும் நல்லவர்களுக்கும் அல்லவா? புரிகின்றது. தொழில் ஸ்தானத்தில் தடுமாற்றம் வரும். எதிர்ப்பாளருடன் நிதானமாக இருக்கவும். பணம் வரும். வீடு, வாகனச் சிறப்பு, தூரத்துச் செய்தியால் படபடப்பு, இடமாற்ற முயற்சி என்பனவும் ஏற்படலாம். மாணவர்களுக்கு, விசேட சித்திகளும், ஆசிரியரின் பாராட்டும் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: புதன்.*

### கடகம்

ஒரு மனிதன் ஏழு வருடங்களுக்கு ஒருமுறை தன் நிலைகளை மாற்றிக் கொள்கின்றான். ஏன் ஏழு நாள்களுக்குள் தன்னை மாற்றிக்கொள்ளும் அநேகம்பேர்கள் நம் மத்தியில் உள்ளார்கள். தொழில்ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை ஏற்படும். அரச அதிகாரிகளின் கண்டிப்பு ஏற்படும். பணத்தால் பகைமை ஒன்றுவரும். மாணவர்களுக்கு எதிர்ப்புவரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

மனித வாழ்க்கைக்கு வேகமான இயல்புகளை, திட்டங்களை உருவாக்கி அதிக பலனைக் கொடுக்கும் இயல்புள்ளவர்களால் பலனடைகின்றாகள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் புத்திசாதுரியமான செயற்பாட்டால் நன்மைகள் அதிகரிக்கும். தூரத்து செய்தி நன்மை தரும். பொருள் வரவு, தடுமாற்றம் என்பன ஏற்படும். எதிர்ப்பாலாரால் நன்மைகள் அதிகரிக்கும். பொருள் கொடுக்கல் வாங்கலால் மனஸ்தாபம் வரும். மாணவர்களுக்கு எதிர்காலத்திட்டங்களுக்கு வழிவகுத்தல் நடக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள் : புதன், சனி.*

## மகாதேவா ஜோதிடம்

### கன்னி

ஒவ்வோர் ஆணுக்கும் பெண் துணை ஆறுதல் கொடுக்கும். மனித கவர்ச்சியால் மனித வாழ்வில் நம்பிக்கை பிறக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் மந்தநிலை வரும். மாணவர்களுக்கு புதிய நண்பர்கள் கிடைப்பர். குடும்பத்தினிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### துலாம்

நஷ்டம், கஷ்டம் எல்லாம் விதி வழி நிர்ணயிக்கப்படுகின்றது. ஒருவரை ஒருவர் குறைகூறுவதால் என்ன நடக்கும்? சந்தர்ப்பம் ஒருவரை குற்றவாளி ஆக்குகின்றது. தொழில் ஸ்தானத்தில் வரவு அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். சகோதரங்களுக்கு, மாற்றங்களும் தொழில் சிறப்புகளும் ஏற்பட இடமுண்டு. இடமாற்ற யோசனை வரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

குண்டுச் சத்தம், வெடிச் சத்தம் போன்றவை அடிக்கடி பயங்கர உணர்வுகளை வயது போனவர்களுக்கு மட்டுமா கொடுக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் சிலர் வெடிச் சத்தம் போல் அடிக்கடி கதைத்து மனப் பயத்தை உண்டாக்குகிறார்கள். பொருள் வரவு, இனிய பேச்சு, புதிய திட்டம், தூரத்துச் செய்தி, அயலவர் தொல்லை என்பன எட்டலாம். மாணவர்களுக்கு, நன்மைகள் அதிகரிக்கும். சுப மங்களப் பேச்சு தடைப்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி, சனி.*

### தனுசு

இளமையைத் தேட எத்தனை பேர் வாசனைப் பொருள்கள், இடாம்பகப் பொருள்களுக்காக அள்ளிஅள்ளிச் செலவழிக்கிறார்கள். எல்லோராலும் இது முடிகின்றதா? தொழில் ஸ்தானத்தில் பழையன கழிந்து புதியன வரஇடமுண்டு. காலத்திற்கேற்ப மாற்றம் செய்வீர்கள். மாற்றங்கள் சகஜம். புதிய வருமான யோசனை வரும். அதிகாரிகளுடன் மனக்கருத்து வேற்றுமைப்படும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். பொதுத்தொண்டு இன ஜனக் கொண்டாட்டம் ஏற்படும். புதிய செய்திகள் வரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி, சனி.*

### மகரம்

மனதைப் பாதுகாக்கவேண்டும். உடலைப் பாதுகாக்கவேண்டும். தனி மனித வாழ்வில் உடல் நோயால் உயிர் அழிவை எத்தனையோ பேர் சந்திக்கின்றார்கள். எமது தேவை எமது குறைகள் எமக்குத்தான் தெரியும். உன்னையே நீயறிவாய் என்று கிரேக்கஞானி சோக்கிரட்டீஸ் சொல்லவில்லை? தொழில் ஸ்தானத்தில் வரும் குறை, தேவைகளை நிவிர்த்தி செய்ய முற்படுவீர்கள். பிறருக்கு ஆலோசனை வழங்குவீர்கள். வீடு, வாகனச் சிறப்பு உடையவராகவும் இருப்பீர்கள். மாணவர்கள், புதிய துறைகளை நாடுதல் நடக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும் - தூரத்துச் செய்திகள் நன்மை கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, வெள்ளி, சனி.*

### கும்பம்

வயது வந்துவிட்டது. கடந்துவிட்ட வாழ்க்கையை எத்தனையோ பேர் தேடிப்பிடிக்க முயலுகின்றார்கள். பழையன கழிதலும் புதியன புகுதலும் வாழ்க்கையில் சிறப்புக் கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்ப்பாளருடன் நிதானம் அவசியம். காணி, பூமி சம்பந்தமான யோசனை ஏற்படும். குடும்பத்தினருடன் கருத்து வேற்றுமை வரும். பொருள் ரீதியில் கொடுக்கல் வாங்கலால் குறைகள் வரும். தூரத்துச் செய்தி விரோதமாக அமையும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, சனி.*

### மீனம்

திருமணக் குறிப்புகளில் கிரக பாவங்களைப் பார்ப்பதுவே பாவ காரியமெனச் சிலவேளை பாவங்களைச் சரியாகக் கணிப்பதில்லை. அதனால் பெற்றோர்கள் தடுமாறுகிறார்கள். குழந்தைகளின் வாழ்வில் பெற்றோர் கவனமாக இருப்பது அவர்கள் கடமையல்லவா? தொழில் ஸ்தானத்தில் குறைகள் வரும். மாற்றங்கள் சகஜம். தூரத்துச் செய்தி பயத்தைத் தரும். களவு போகலாம். அயலவர்கள் குறை சொல்லுவார்கள். மாணவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, சனி.*

★

# இரண்டாம் நாள் நிகழ்வு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை, மாலை என இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

காலை நிகழ்வுகள் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை தலைவர் வி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மனித வள கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கும், சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அ. தில்லை நடராஜாவும் கலந்துகொள்வர். இந்த நிகழ்வில் ஞாபகார்த்த முத்திரை வெளியீடு, பட்டி மன்றம் ஆகியன இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் கல்லூரி அதிபர் நடசிவகடாட்சம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் கலைஞர் கௌரவிப்பு, கலைநிகழ்வுகளான குழு இசை, இசை அரங்கு, நடன அரங்கு, நாடகம் என்பன நடைபெறவுள்ளன. (ம-72)

## வாசகர் திருமுகம்

### யாழ். மாநகரசபைப் பகுதியில் சூழல், சுகாதார நிலை மோசம்

"சூழலைப் பேணுவோம், சுகமுடன் வாழுவோம்" என்று எழுதப்பட்ட 'பனர்'களை யாழ். மாநகரசபை சமீபத்தில் வீதிகளிலே கட்டிவைத்திருந்தது.

குடாநாட்டு சுகாதார நிலையை எடுத்து நோக்கினால் யாழ். மாநகர சபை எல்லைகளில் 'நோய்கள் வரவேற்கின்றன' என அறிவித்தல் போடுவதன்மூலம் மக்களை நோய்களில் இருந்து விடுவிக்கமுடியும் .

யாழ்.குடாநாட்டில் நோய்களின் பிறப்பிடம் என்றால் யாழ்.மாநகர சபை எல்லைக்குள்தான் உண்டு என்பதனை எல்லோரும் அறிவார்கள். யாழ்.பஸ்நிலையப் பகுதி சேற்றினால் ஒரே துர்நாற்றம் அடிக்கிறது. குருநகர் முதலாம், 2ஆம், 3ஆம் குறுக்குத்தெரு எங்கும் நுளம்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. யாழ்நகரின் மத்தியில் அமைந்துள்ள ஆரிய குளத்தில் ஆனைக்காலை உண்டாக்கும் அந்தரத் தாமரை யாழ். மாநகர சபையின் கண்ணில் தெரியாமல் இருப்பது ஏன்தானோ தெரியவில்லை. அல்லது அழகாக இருக்கின்றது என மாநகரசபை அந்தரத் தாமரையை வளர்க்கின்றதோ தெரியவில்லை.

நல்லூர் இராச வீதியில் ஓர் இளம் பெண் டெங்கு நோயால் இறந்தது வேதனையை அளிக்கின்றது. அந்தச்சுற்றாடல் முழுவதும் ஒரே குப்பை கூழங்கள் தேங்கி அழுகிய நிலையில் உள்ளன. இதேபோல் மேலும் பலருக்கு டெங்குக் காய்ச்சல் வரக்கூடிய வாய்ப்பை யாழ். மாநகரசபை ஏற்படுத்தியுள்ளது.

வாய் திறந்தால் நிதிப்பற்றாக்குறை பற்றித்தான் கதைக்கிறார்களே தவிர திட்டநோக்கங்கள், தூரப்பார்வை இன்றி அபிவிருத்தி அற்ற ஒரு சபையாகவே மாநகரசபையை தமிழர் விடுதலைக் கூட்டணி வழி நடத்துகிறது.

*ஆடியபாத வீதி, யாழ்ப்பாணம்.* **சோ.புவனேந்திரன்**

### பட்டாசு விற்பனையை தடை செய்யுங்கள்!

யுத்தம் ஓய்ந்து நிசப்தம் நிலவ மக்கள் அமைதிச் சூழலை அனுபவித்துக் கொண்டிருக்கையில் மீண்டும் யுத்த அசுரனின் பிடியில் சிக்கிவிட்டதுபோன்று குடாநாடு வெடியொலிகளால் அதிர்ந்துகொண்டிருக்கின்றது. வகை தொகையின்றி இங்கு எடுத்துவரப்படும் பட்டாசுகளினால் குடாநாடே யுத்தகளமாகிவிட்டது. வெடி கொளுத்துவது தமது சந்தோசத்தை வெளிக்காட்டவே என்றிருந்தாலும் இது தற்பொழுது எல்லைமீறி மற்றையவர்களைச் சீண்டுவதற்கும், பயமுறுத்துவதற்கும், கேலிசெய்வதற்கும் வீண் சண்டைகளை உருவாக்குதற்குமே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதனால், பொதுமக்களின் அமைதி கெடுவதுடன், தேவையற்ற கோஷ்டி மோதல்கள், வெறுப்புணர்வு, பகைமை, உயிர், உடமைச் சேதம், தேவையற்ற பணவிரயம் போன்றவற்றுக்கும் அடிகோலுகின்றது.

உதாரணமாக அண்மையில் வெடி கொளுத்திய சம்பவத்தால் கோப்பாயில் பொதுமகனொருவர் கத்திவெட்டுக்கிலக்கானதும், நாச்சிமார் கோயிலடியில் குடும்பஸ்தர் சீறுவானத்தினால் கண்பார்வை இழந்ததும், நல்லூர், முத்திரச்சந்தை, யாழ்.நகர், மண்டைதீவு... போன்ற பல இடங்களிலும் ஏற்பட்ட கோஷ்டி மோதல்களையும் சில உதாரணமாகக் குறிப்பிடலாம். வீதியில் செல்வோரை நோக்கிப் பட்டாசுகள் வீசப்படுவதனாலும், கோஷ்டி மோதல்களாலும் வீதியிலே மக்கள் அமைதியாக நடமாடமுடியாதநிலை ஏற்படுகின்றது.

அத்துடன் பட்டாசுகள் பெருந்தொகையாக எவ்வித பாதுகாப்பு முன்னேற்பாடுகளுமின்றி நெரிசலாக நடமாடுகின்ற பகுதிகளிலும், கட்டட நெரிசலான பகுதிகளிலும், வீதியோரங்களிலும் வைத்து விற்பனை செய்யப்படுவதனால் வெடிவிபத்து ஏற்படுகின்ற சமயங்களில் பெரும் தீ விபத்து ஏற்படுகிறது. அதனால், மக்களின் உயிர், உடைமைகளுக்குச் சேதம் ஏற்படுகிறது. இவ்வாறான வெடிவிபத்தினால் அண்மையில் கொழும்பில் ஏற்பட்ட பெரும் உயிர், உடைமை இழப்புகளை நாம் என்றும் மறந்துவிடமுடியாது. அத்துடன், முனீஸ்வரன் வீதியிலுள்ள புடவைக் கடைகளில் இத்தகைய வெடிவிபத்தினால் 3 கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

ஏற்கனவே, வெடிகளினால் ஏற்படும் இத்தகைய எல்லைமீறிய ஆபத்துக்களையும், அசம்பாவிதங்களையும் தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதற்கு இலகுவான வழி யாழ்.குடாநாட்டுக்கு பட்டாசுகள், ஈர்க்கு வாணங்கள் எடுத்துவரப்படுவதையும், அவை இங்கே விற்பனை செய்யப்படுவதையும் முற்றிலுமாக தடுப்பதே - இதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளும், அரச நிர்வாகத்தினரும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாவிடில் எதிர்வரும் தைப்பொங்கல் காலங்களில் இத்தகைய அசம்பாவிதங்களும், கோஷ்டி மோதல்களும் கட்டுமீறுவதை யாராலும் தடுக்கமுடியாது போய்விடும். உரியவர்கள் இதை கவனத்தில் எடுத்து உடன் செயற்படுவார்களா...?

*கொக்குவில் கிழக்கு.* **எஸ்.என்.பிறேம்.**

# ஆதரவற்ற 200 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

## சமூக நலனோம்பு அமைச்சர் வழங்கினார்

யாழ்.குடாநாட்டில் ஆதரவற்ற 200 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் வருகைதந்த சமூக நலனோம்பு அமைச்சர் ரவீந்திர சமரவீர நேற்றுமுன்தினம் இவற்றை வழங்கினார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்த அமைச்சர், நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கு பற்றினார். அங்கு ஆதரவற்ற 200பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும் மருதனார்மடம் வாழ்வகத்திற்கு தட்டச்சு மற்றும் ரோணியோ இயந்திரங்களையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றியும் அமைச்சர் விரிவாகக் கேட்டறிந்தார். சமூகநலனோம்பு அமைச்சு அதிகாரிகள், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா, மேலதிக அரச அதிபர் துவைத்திலிங்கம் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன் பின்னர் நயினாதீவுக்குச் சென்ற அமைச்சர் அங்கு நாகதம்பிரான் விநியோகத்திட்டத்துக்கென 10 லட்சம் ரூபா நிதிக்கான காசோலையை சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்தார்.

நேற்றுக்காலை கைதடியில் உள்ள முதியோர் இல்லத்துக்கு சென்ற அமைச்சர், அங்கு புதிய விடுதி ஒன்றை அமைப்பதற்கென ஒரு கோடி 40 லட்சம் ரூபாவை அங்கு வைத்து யாழ்.அரச அதிபரிடம் வழங்கினார். பின்னர் வட்டுக்கோட்டை பராமானந்தா முதியோர் இல்லத்துக்கும் அமைச்சர் விஜயம் செய்தார். (மக-1-73)

## ஒத்திவைக்கப்பட்டது

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ்.கைலாசபதி கலையரங்கில் நடத்தப்படவிருந்த "ரீங்கார மழை" இசை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணங்களால் ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நடைபெறும் திகதி பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம.
*யாழ்பல்கலைக்கழகம்*

(12387)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## சுன்னாகம்/உடுவில்/ஏழாலை
## உப அலுவலகங்கள்
## ஆதனவரி அறிவித்தல்கள் - 2003

1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல.-15 இன பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2003 ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2003ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்களுக்கு இவ்வருடத்துக்கான மொத்தவரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு கந்தாயத்திற்கும் உரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்களுக்கு அக்கந்தாயத்துக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் 15% மும் ஏனைய ஆதனங்களுக்கு 20% மும் விறாந்துக் கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

ஆதலினால், வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரியை 2003.01.31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*குறிப்பு:-*

*01. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கல்கள் மற்றும் ஏதாவது ஆட்சேபனைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் எழுத்து மூலமாக 2003.01.31 ஆம் திகதிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.*

*02. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த ஆதனவரி அறிவித்தல்கள் காலதாமதமானாலும் இந்த அறிவித்தலையே ஆதனவரி அறிவித்தலாக ஏற்று, தங்கள் தங்கள் ஆதனங்களுக்கான ஆதனவரியை உரிய காலங்களில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2002.12.24. (C/25717)

[illegible] தேரியுள்,
தலைவர்,
வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## யாழ்ப்பாண கோட்டக் கல்வி அதிகாரி பதவிக்கான
## விண்ணப்பம்

தை மாதத்தில் இருந்து வெற்றிடமாகவிருக்கும் மேற்படி பதவிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. இப்பதவி இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்-III இற்குரியதாகும். இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுயவிவரங்களை உள்ளடக்கி சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 31.12.2002 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவும்.

27.12.2002 (C-25711)

வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்
## திருமதி திரிபுரசுந்தரி விசாகசுந்தரம்

சத்திரசிகிச்சைத்துறைப் பேராசிரியரும், நரம்பியல் நிபுணருமான பேராசிரியர் வி.குணானந்தம் அவர்களின் அன்புத் தாயார் திருமதி திரிபுரசுந்தரி விசாகசுந்தரம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் எமது பேராசிரியர் டாக்டர் குணானந்தம் அவர்களுக்கும் அவரின் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

போதனைசாரா ஊழியர்கள்,
சத்திரசிகிச்சைத்துறை, மருத்துவத்துறை,
குழந்தை மருத்துவத்துறை,
பெண் நோயியல் மகப்பேற்றுத்துறை. (12379)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் பகுதித் தலைவரும் உடற்கல்வி ஆசிரியருமாகிய திருவாளர் க.கனகசபாபதி அவர்களின் அன்புத் தந்தையார்

## சு.கணபதிப்பிள்ளை

அவர்கள் 26.12.2002 அன்று காலமான செய்தியைக் கேட்டு நாம் ஆழ்ந்த துயருறுகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலைஅபிவிருத்திச் சங்கம்.
*யா/இணுவில் இந்துக் கல்லூரி.* (12378)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ். உயர்தர தொழில்நுட்ப நிறுவனத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த உயர் தேசிய முகாமைத்துவ மூன்றாம், நான்காம் வருடப் பரீட்சைகள் அடுத்த மாதம் 18ஆம், 19 ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளன என்று அந்நிறுவனத்தின் வியாபாரக் கற்கைநெறிகள் பகுதித் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-3)

## கலைஞானி சிரார்த்ததின நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

மாமனிதர் கலைஞானியின் முதலாவது சிரார்த்த தினத்தையொட்டி நினைவுக் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

மாமனிதர் கலைஞானி ஞாபகார்த்தக் குழு இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. (ஒ-3)

## நத்தார் நற்செய்திப்பணி

நல்லூர்,டிசெ.28

வடமராட்சிப் பகுதியில் நாற்சதுர சுவிஷேச சபையினரின் நத்தார் நற்செய்தி பணி கடந்த 20ஆம், 21ஆம், 23ஆம் திகதிகளில் இடம்பெற்றன. இதில் சுவிஷேச சபை விசுவாசிகள் பங்குபற்றினர் என்று நாற்சதுர சுவிஷேச சபையினர் தெரிவித்தனர். (ஐ-ரி)

## உபவாசக் கூட்டங்கள்

நல்லூர்,டிசெ.28

நாற்சதுர சுவிஷேச சபையினரின் உபவாசக் கூட்டங்கள் நாளை முதல 3நாள்களுக்கு அவ்வப் பிராந்திய சபைகளில் இடம்பெறவுள்ளன. இக் கூட்டங்களில் புத்தாண்டு வரவேற்புடன் நாட்டிற்கு சமாதானம் வேண்டி பிரார்த்தனைகளும் இடம்பெற உள்ளன. இறுதி நாளான 31ஆம் திகதி இரவு விழிப்பிரவு ஜெபமும் இடம்பெறவுள்ளதாக நல்லூர் நாற்சதுர சுவிஷேச சபைப் போதகர் தெரிவித்துள்ளார். (ஒ)

## வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியருக்கு!

நல்லூர்,டிசெ.28

வலிகாமம் கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக கலந்துரையாடலில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தபாஸ்கரன் கேட்டுள்ளார். (ஒ)

## நூல்வெளியீடு

ஈழநாடு பத்திரிகையின் முன்னாள ஆசிரியர் எஸ்.பெருமாளின் 'பத்திரிகைத துறை - நினைவுக்குறிப்புக்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை மாகாண இணைப்பாளர் கலாநிதி க.குணராசாவும் ஆய்வுரைகளை இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரை, உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோரும் வழங்குவர். டாக்டர் எஸ்.சற்குருநாதன் நூலின் முதற் பிரதியை பெற்றுக்கொள்வார். (ஒ)

## சுகாதாரசபை கூட்டம்

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையின் இவ்வாண்டிறுதிக் கூட்டம் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு சட்டத்தரணி இரா. வசந்தசேனன் தலைமையில் மானிப்பாய் மெடி.கிளினிக்கில் நடைபெறவுள்ளது. (ஒ-90)

## தேவை

**சைக்கிள் வேலைகள் தெரிந்த ஆள்கள் தேவை. 30 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.**

**357, கே.கே.எஸ். வீதி**
(இ.மின்சாரசபை அலுவலகம் முன்பாக),
(12371) **யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

**அருளகம் இல்ல முகாமையாளர் அவர்களின் அன்புக் கணவர்**

## பாலசிங்கம் மாணிக்கசிங்கம்

**அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆழ்ந்த துயரில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவுகளுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாருக்கு எமது கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம்.**

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.* (12382)

காப்பாளர், பிள்ளைகள்,
அருளகம் பெண்கள் இல்லம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரட்ணம் தெய்வானை

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரட்ணம் தெய்வானை நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசாரி நாகரட்ணத்தின் (நாகநாதர்) அன்பு மனைவியும் பரமேஸ்வரி, ஆசாரியர்களான தம்பிராசா, தவராஜா, ஆனந்தராஜா மற்றும் கௌசலாதேவி ஆகியோரின் அருமைத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2002) சனிக்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*வட்டுக்கோட்டை.* (12375)

தகவல்:
பிள்ளைகள்.

### சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (26.12.2002) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, முத்துப்பிள்ளை, செல்லையாசுவாமியார், செல்லப்பா, பொன்னையா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற நேசம்மா, பஞ்சலிங்கம், சோதியம்மா மற்றும் நீலசுலோஜனாதேவி ஆகியோரின் மைத்துனரும் கனகசபாபதி (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), நித்தியானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசலட்சுமி, கௌரிமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் வேணுகானன், சுபவீனா, கெங்கா, வித்தியாகரி, செந்தூரன், சிந்துஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"எழில்அகம்."*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (12372)

தகவல்:
க.கனகசபாபதி (கணேசு)
(ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி).
க.நித்தியானந்தன்
(மகன்மார்)

### பாலசிங்கம் மாணிக்கசிங்கம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் மேதா பெண்கள் இல்லத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் மாணிக்கசிங்கம் நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார், திருமலரின் அன்புக் கணவரும் நிரோஷன், சுதர்ஷன் (யாழ்.பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (28.12.2002) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'அருளகம்'*
*பெண்கள் இல்லவளாகம்,*
*மருதனார்மடம்.* (12381)

தகவல்:
திருமலர் (மனைவி).

### சிவசுப்பிரமணியம் ஜெயசீலன்
### (குட்டித்தம்பி)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் ஜெயசீலன் (குட்டித்தம்பி) நேற்றுமுன்தினம் (26.12.2002) வியாழக்கிழமை கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - யோகராணி தம்பதியினரின் அன்பு மகனும பாமா (ஜேர்மனி), பத்மசீலன், குணசீலன் (ஜேர்மனி), பிரதீபா (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சந்திரகுமார், மாலதி, புஸ்பமாலா, கஜேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் நிஷாந், பிரஷாந், கிருஷான், சசிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும் சபீந்தன், சங்கீதா, லேக்கா, பிரியங்கா, கௌசிக், அபிநயா ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனடா -*
*0014162653918* (12383)

தகவல்:
சிவபாலசுப்பிரமணியம் (பாப்பா-மாமா)
சிவாஸ் ஸ்ருடியோ,
பண்டத்தரிப்பு.

### திருமதி றமேஸ்காந்தன் லக்சுமிதேவி

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த திருமதி றமேஸ்காந்தன் லக்சுமி தேவி அவர்கள் 23.12.2002 அன்று காலமாகிவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2002) சனிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உள்ளிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (12389)

தகவல்:
ச.றமேஸ்காந்தன்
(கணவர்)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



நல்லூர் சட்டநாதர் கோயிலடியைச் சேர்ந்த

வடிவேலு வரதராஜா-ஜெயந்தி தம்பதிகளின் புதல்வி

**விந்துயா**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (28.12.2002) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, சகோதரிகள் நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

சட்டநாதர் கோயிலடி,
நல்லூர்.

வடிவேலு வரதராஜா
*(நாகசுர வித்துவான்)*
தம்பதிகள்

(C/25719)





## இதோ!,
## இதோ புதிய சலுகை

வாகன அனுமதிப்பத்திரமும் காப்புறுதியும் இல்லாமல் செலுத்தக்கூடிய ஹீரோ மோட்டார் சைக்கிள் (49CC) எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

**அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனம்,**
இல.07, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/25718)



## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 31 | 02 |
| 03 | 07 |
| 1957 | 2002 |

## அமரர் செல்லையா பற்குணராஜா

*ஈரவிழி காயவில்லை*
*ஈர்மூன்று மாதம் சென்றதையா!*
*தரணியிலே அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த*
*எம் அன்புச் செல்வமே, சகோதரமே!*
*உன் பிரிவால் உளமுருகி வாடுகின்றோம்.*
*ஆண்டுகள் பலசென்றாலும் மாறாது உம் நினைவுகள்*

இன்று (28.12.2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

37/1, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்பு அப்பா, சகோதரர்கள், சகோதரிகள்.

(12390)



# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 15.04.1942

விண்ணில் 20.12.2000

## கதிரவேலு பரமசாமி

விண்ணகம் விரைந்து நீ ஈராண்டாயிடினும்
மண்ணகம் உன்பணி மறக்குமோ தம்பி!
உன் ஆத்மா ஞானவைரவரடியில் நிரந்தர
சாந்தியடையப் பிரார்த்திக்கும்...

சகோதரி
திருமதி கு.ஷண்முகதாஸ்

*தலையாழி.*
*கொக்குவில்.*

(12388)


## முச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.28

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை ஞயிற்றுக் கிழமை நல்லை ஆதீனத்தில் இடம் பெறவிருந்த முச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## ஆஞ்சநேயர் ஆலய இசையரங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இடம்பெற்று வரும் இலட்சார்ச்சனையையொட்டி தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இசையரங்கில் இன்று ஆர்.இராதாகிருஷ்ணன், செல்வி சயிந்தவி இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து வழங்கும் வயலின் சோலோ கச்சேரி நடைபெறும். மிருதங்கம்- எஸ்.துரைராஜா, கெஞ்சிரா- கே.அனந்தகோபன், முகர்சிங்- எஸ்.ராசு ஆகிய கலைஞர்களும் இதில் பங்கேற்பர். (ஒ-3)


கலை வர்த்தகம்

A/L 2005

முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

கல்வியின் சிகரம்

C.C.A. சுன்னாகம்

ஆரம்பம்

04.01.03

3.00 p.m.



## ஆசிரியர் தேவை

தரம் - 6, 7, 8, 9 வகுப்புகளுக்கு கல்விகற்பிக்க ஆங்கிலபாட ஆசிரியர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி,
யாழ்நகர்.

(12332)



## BARATHY

கல்வி நிறுவனம்
சித்தன்கேணி

**A/L 2005**

கலை, வர்த்தக பிரிவுகள்

வர்த்தகப்பிரிவு- 04.01.2003
சனி- 3 மணி.
கலைப்பிரிவு- 06.01.2003
திங்கள்- 3.15 மணி

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும் (12380)



## ராஜா யாழ்ப்பாணம்.

எம்.ஜி.ஆர் அவர்களின் 15 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு எம்.ஜி.ஆர், ராதாசலூஜா நடித்த

**இதயக்கனி**

காட்சிகள்:10.30, 2.30,6.30

(C-25437)



## நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ், ஆனந்தராஜ் நடித்த

**ஏழுமலை** (ரீஸ்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள்:

*வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.)*

(12317)



## நிரஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார்,நெப்போலியன்,தேவயானி நடித்த

**தென்காசிப்பட்டணம்**

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே.)

27-12-2002 முதல் வெள்ளி, சனி, ஞாயிறு

JACKION நடித்த *SHAFT*

இரவு 8.45 (புதிய நேரம்) மட்டும்.

(C/25436)


# 'மொபிற்றல்' சேவை விஸ்தரிப்பு

ரெலிக்கொம் நிறுவனத்தின் 'மொபிற்றல்' செல்லிடத் தொலைபேசி சேவை யாழ்ப்பாணத்திற்கும் நேற்று முன்தினம் முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு கடந்த மாத மளவில் விஸ்தரிக்கப்பட்ட இந்தச் சேவை நேற்று முன்தினம் முதல் யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் பொதுமக்களுக்கு இணைப்பு வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவிருப்பதாக கூறப்பட்டது. (ஒ-3)


## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்த்துமா, உடல்பருமன், சலரோகம், மூலம் (Piles), முகப்பரு, இளநரை, தலைமுடி கொட்டுதல், தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்குத் தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**

Dr.R.K.நவனீதன் DYNS, SMP, NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.உல்லாசப் பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

முந்துங்கள்! டிசெம்பர் 28,29,30ஆம் திகதிகளில் மட்டுமே முகாம் நடைபெறும்.

யோகாசன VCD கேசற்கள் கிடைக்கும். (12365)



சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்

## அவசர கலந்துரையாடலும் விசேட மஹாசபை கூட்டமும்

நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் *(நல்லூர் ஆலயம் முன்பாக)* பி.ப.2 மணியளவில் நடைபெறும் கலந்துரையாடலில் இந்துசமய கலாசார விவகார அமைச்சர் மாண்புமிகு திரு.தி.மகேஸ்வரன கலந்துகொள்வதோடு இந்துமத குருமாரின் பல முக்கியமான விடயம் நிகழ்வில் இடம்பெறவிருப்பதால், அந்தணப் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். விவரம் நாளைய பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

நன்றியுடன்.....

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா
*பொதுச் செயலாளர்.*

(12392)



# கானான் ஜெப ஆலயம்

வழங்கும்

## ஒளி விழா நிகழ்ச்சிகள் -2002

- *இன்னிசைக் கானங்கள்*
- *கண்ணுக்கினிய நடனங்கள்*
- *எழுச்சியூட்டும் நாடகங்கள்*
- *பார்க்கப் பரவசமடைய*

காலம்:
28,29,30.12.2002

நடைபெறும் இடங்கள்:
*கானான் ஜெப ஆலயம்*
*இருபாலை, கோப்பாய்.*

நேரம்: மாலை 3.00 மணி

31.12.2002 இரவு 10.00 மணிக்கு விழிப்பிரவு ஆராதனையும்
01.01.2003 காலை 9.00 மணிக்கு புதுவருட ஆராதனையும்
கானான் ஜெப ஆலயம், இருபாலை, கோப்பாயில் நடைபெறும்.

"யாவும் இலவசம்! யாவரும் திரண்டு வருக!!"

அவர் நாமம் அதிசயமானவர்......ஏசாயா 9:6

இருபாலை - கோப்பாய்.



# பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில்,
நாவலர் றோட்,யாழ்ப்பாணம்.

இணுவில் மத்திய கல்லூரி அருகில்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

## A/L 2005
கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 04.01.2003

யாழ்.நகரில் - 10 மணி இணுவிலில் - 3 மணி

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக அரங்கு | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | கியூபேட் | கியூபேட் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

(12380)

# வீரமாகாளியம்மன் ஆலயத்துக்கு பெறுநரை நியமித்தது நீதிமன்றம்

வண்ணை வீரமாகாளியம்மன் ஆலயத்தின் புனர்நிர்மாணம் மற்றும் பணிகளை மேற்பார்வை செய்ய, யாழ். மாவட்ட நீதிமன்றப் பதிவாளரை பெறுநராக நீதிமன்றம் நேற்று நியமித்துள்ளது.

மாவட்ட நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றை விசாரணை செய்த யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, பெறுநரை நியமித்துள்ளார்.

ஆலய நிர்வாகத்தை தற்சமயம் பரிபாலித்து வருபவர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்றும் -

ஆலய புனரமைப்புப் பணிகளுக்காக இந்து கலாசார அமைச்சு வழங்கிய நிதியை முறைகேடாக அவர் கையாள முயற்சிக்கிறார் என்றும் -

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிபதி, இந்து கலாசார அமைச்சு வழங்கிய ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் உள்ள ஆலய கணக்கில் வைப்பிலிடவேண்டும் என்று உத்தரவிட்டார்.

ஆலயப் புனரமைப்புப் பணிக்கு இந்து கலாசார அமைச்சு வழங்கவுள்ள எஞ்சிய நிதியை மேற்கண்ட ஆலய வங்கிக் கணக்குக்கு நேரடியாக அனுப்புமாறு இந்து கலாசார அமைச்சின் செயலாளருக்கும் நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-3)


புலமைப் பரிசில் திட்டம் - 2003
போட்டிப் பரீட்சை

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 29.12.2002 நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை இடம்பெறும். விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் யாவும் 20.12.2002 முதல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள், IIS, தலைமை அலுவலகம், இல.100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட பரீட்சை மண்டபத்தில் தோற்ற முடியும் என்பதனை அறியத்தருகிறோம்.

பரீட்சை விடயம் : பொது அறிவு
நுண்ணறிவு

Director, IIS, Jaffna.


## தையல் பயிற்சிக்கு நேர்முகப்பரீட்சை

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில தொழில் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள நேர்முகப்பரீட் சையில் விண்ணப்பித்தவர்களுக்கு உரிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-86)


புதிய கணனி வகுப்புகள்
DIP.IN MS OFFICE
ஆரம்பம்:
29-12-2002
மாலை 4.00 மணி
UNIVAC
College of Computer Information Technology
SITHANKERNY.
(25669)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:- MR.S.B.SASI
ஆரம்பம்: 29.12.2002
4.00 p.m.
NEW HARY'S INSTITUTE
SITHANKERNY.
(C/25668)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
O/L எடுத்த மாணவர்களுக்கு
ENGLISH CLASS
பிரிவு II (31)
ஆரம்பம்: இன்று (28.12.2002) பிற்பகல் 4.30
By: சடகோபன் (12350)

இந்திய பரம்பரை
ஜோதிடர்
அருள்வாக்கு அம்பிகா அம்மா
இப்பொழுது யாழ்.மாநகரில்.
இடம்: அருள்வாக்கு அம்பிகா அம்மா,
மடோனா லொட்ஜ்,
121, கஸ்தூரியார் வீதி
(லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்),
யாழ்ப்பாணம். (12368)


### துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்

செல்வி த.குலரஞ்சினி அவர்களின்

அன்புத் தந்தையார்

**குமாரசாமி தர்மலிங்கம்**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*தீவுப்பகுதி தெற்கு,*
*வேலணை.* (C/12391)

பிரதேச செயலக
நலன்புரிச்சங்கம்.

# இராணுவ ஆக்கிரமிப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையை பெரிதும் தகர்ப்பதோடு பொதுமக்களின் அதிருப்தியையும் அதிகரிக்கச் செய்திருக்கின்றது." - என்று புலிகள் இயக்கம் தெரிவித்திருக்கின்றது.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) அனுப்பிய கடிதத்திற்கு விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் நேற்று அனுப்பிய பதில் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

இயல்பு நிலை உருவாக்கம், மோதல் தணிப்பு, மீள்குடியமர்வு, உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக நேற்று (26.12.2002) நீங்கள் விடுத்த அறிக்கையை மிகக் கவனமாக நாங்கள் பரிசீலித்தோம்.

யுத்தநிறுத்த உடன்பாட்டின் கீழான ஒருவருட காலம் பற்றிய உங்களின் மதிப்பீடு நம்பிக்கை தரும் மற்றும் சாதகமான பல அம்சங்களைக் கொண்டிருக்கின்ற போதிலும், யாழ்ப்பாணப் பாதுகாப்பு நிலைமை தொடர்பான தங்களின் கருத்தும், தீர்ப்பும் எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

உள்நாட்டுக்குள் இடம்பெயர்ந்த பல நூறாயிரம் பேரை குடாநாட்டில் மீளக் குடியமர்த்தும் விடயம், பெரும் மனிதாபிமானப் பிரச்சினையாக உருவெடுத்திருப்பதையும் சமாதானப் பேச்சுக்களிலும் அதேசமயம் பெரும் வெகுஜனப் போராட்டத்திலும் மையப் பிரச்சினையாக அது மாறியிருப்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

யாழ். பூகோளப் பரப்பில் முப்பது வீதப் பிரதேசத்தில் உள்ள பொது உடைமைகளை பலவந்தமாக பிடுங்கிக் கொண்டுள்ள இலங்கை இராணுவம், அதை 'உயர் பாதுகாப்பு வலயம்' என்று உரிமை கொண்டாடுகின்றது.

உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்தோர் தமது உடைமைகளை மீளப் பெறுவதை அனுமதிக்க யுத்த முனைப்போடு இராணுவம் மறுப்பது மனித உரிமைகளையும் தனியாள்களின் சுதந்திரத்தையும் அப்பட்டமாக மீறும் நடவடிக்கை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

மேலும் பொது இடங்களில் இருந்து வெளியேறுவது மற்றும் மீன் பிடிக்கான கட்டுப்பாடுகளை விலக்குதல் ஆகியவை தொடர்பில் யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழான தனது கடப்பாடுகளை இலங்கை இராணுவம் இன்னும் முற்றாக நிறைவேற்றவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் -

மோதல் தணிப்பு நடவடிக்கையை எமது உறுப்பினர்களின் ஆயுதக்களைவுடன் தொடர்புபடுத்தும் யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வின் கடுந்தொனியிலான அறிக்கை, சமாதான நடவடிக்கை மதான எமது நம்பிக்கையைத் தகர்ப்பதோடு பொது மக்களின் அதிருப்தியையும் தூண்டிவிட்டிருக்கின்றது.

கண்காணிப்புக் குழுவின் சார்பில் நீங்கள் தலையிட்டு, பாதுகாப்பு என்ற அடிப்படையில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து இருப்பதை நியாயப்படுத்தியிருப்பதே எங்களை அதிக மருட்சிகொள்ள வைத்திருக்கின்றது.

உயர் பாதுகாப்பு வலயங்களில் செய்யப்படும் எந்தக் குழப்பமும் அரச படைகளின் பாதுகாப்பு மற்றும் போராட்ட வலிமையை குன்றச் செய்யும் என்ற தங்களின் வாதத்தையோ, உங்களின் தீர்மானத்தையோ எங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

தங்களின் இந்த முடிவு, பொது உடைமைகளை சட்ட விரோதமாக ஆக்கிரமித்திருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நிலையை அப்பட்டமாக மீள உறுதிப்படுத்துகின்றது. படைகளின் சமநிலை. என்ற கோட்பாட்டில் அமைந்த - முற்றிலும் இராணுவப் போக்குடைய - தங்களின் வாதம், இடம்பெயர்ந்த மக்களின் பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினையை அற்பமானதாக்கி முற்றிலும் புறம் ஒதுக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத் துருப்புக்களை வாபஸ் பெறும படியோ, முகாம்களை முற்றாக அகற்றும் படியோ புலிகள் இயக்கம் கோரவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதற்குப் பதிலாக, பொதுமக்களின் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ நிலைகளை இடம் மாற்றுவதன் மூலம் இடம் பெயர்ந்த அகதிகள் மீளக்குடியமர வழிசமைக்குமாறே நாம் கோருகின்றோம்.

மேலும், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்.பிரதேசத்தில் இருக்கும் புலிகளின் உறுப்பினர்கள் ஆயுதம் தரிக்காதவர்கள் என்பதால் அவர்கள் அங்கு இராணுவத்திற்கு பெரிய ஆபத்து ஏதும் விளைவிக்கக் கூடியவர்களோ அல்லது படைச் சமநிலையில் குழப்ப மேதும் ஏற்படுத்தக் கூடியவர்களோ அல்லர்.

எம்மைப் பொறுத்தவரை பிணக்கின் தீவிரத்தைக் குறைப்பதன் மூலம் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையை மீள ஏற்படுத்தலும் என்ற அடிப்படையில் மோதல் தணிப்பும் இயல்புநிலை ஏற்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட இரு அடிப்படை அம்சங்கள் என்றே நாம் கருதுகின்றோம்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்களது இல்லங்களையும் இயல்பான அமைதி வாழ்க்கையையும் மறுக்கும விதத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் தீவிர இராணுவ ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகின்ற உங்கள் நிலைப்பாடு, உங்களின் அறிக்கையில் நீங்கள் முன்வைக்கும் அரசியல் மற்றும் தத்துவவியல் கோட்பாடுகளுக்கு சற்றும் ஏற்புடையவையல்ல.

சனநெருக்கடி மிகுந்த பிரதேசத்தை உயர் பாதுகாப்பு-வலயமாக செயற்படுத்துவது அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுத்தும் உள்நோக்கம் கொண்டது. இந்த மோசமான நடவடிக்கை முறையை படைகளின் சமநிலை பற்றிய எந்தக் கோட்பாட்டின் கீழும் நியாயப்படுத்த முடியாது.

இறுதியாக -

யாழ்.இராணுவத் தளபதியின் கடும்போக்கு நிலைப்பாடும் உயர் பாதுகாப்பு வலயங்களை நியாயப்படுத்தும் உங்கள் கணிப்பும் -

வரலாற்று முக்கியத்துவம் மிக்க சமாதன நடவடிக்கைகளின் பெறுபேறாக அமைந்த, மோதல் தணிப்பு மற்றும் இயல்பு நிலைக்கான உபகுழுவை தொடர்பற்றதாகவும் அர்த்தமற்றதாகவும் ஆக்குவதோடு -

மற்றைய குழுவான மனிதாபிமானத் தேவைகளுக்கான உபகுழுவின் செயற்பாட்டிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமசாமி கண்மணி

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி இராமசாமி கண்மணி அவர்கள் நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.105, அரசடி வீதி (பிறவுண் வீதி சந்தி). இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*105, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12394)

தகவல்:
இ.சோமசுந்தரம் (மகன்)
(பரிஸ் ரெக்ஸ்)

### எலியாஸ் சூசைப்பிள்ளை யாக்கோப்பு

(*பெயின்ரர்* - புனித பிரான்சிஸ்கு சபை, 3ஆம் நிலை உறுப்பினர்)

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த எ.சூ.யாக்கோப்பு அவர்கள் நேற்று (27.12.2002) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - கத்தரீன் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் அந்தோனியாப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் நோயல் இம்மானுவேல், ஆவே மரியாலில்லி, பார்பறா, அருட்சகோதரி மேரி புலோமினா (செபமாலை கன்னியர், கொழும்பு), மேரி மெக்டலின், அமலஉற்பவ செல்வராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் எ.க.சூ.இறைபுகழ்வாழி, அருட்சகோதரி கிறிஸ்ரீனா சேவி (செபமாலை கன்னியர், அச்சுவேலி), அற்புத அன்னமலர் ஆகியோரின் அன்புமிகு சகோதரரும் அன்னலிங்கம் (ஈசன்ஸ் நிறுவனம், யாழ்ப்பாணம்), வெலிச்சோர் (சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்) சிறிரங்கநாதன், பேணாட் மகேந்திரன் (ஆசிரியர், உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணதாசன் (பிரான்ஸ்), ரஜனி, கிறிஸ்ரி சோபியா, மரியஜெனற், நிக்சனா, நிக்சலா, வொலன்ரீனா மொறின், வொலன்ரைன்மொறிஸ், டொனால்ட், அலோதர்சன், சரத் றொசான், திரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் பவருபனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.12.2002) சனிக்கிழமை பிற்பகல் 4மணியளவில் கோப்பாய் தெற்கு புனித மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர், கோப்பாய் கத்தோலிக்க சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (12396

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் ஸ்ரீராஜசிங்கம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலையில் நீண்டகாலம் வசித்தவருமாகிய சுப்பிரமணியம் ஸ்ரீராஜசிங்கம் 26.12.2002 அன்று வட்டுக்கோட்டையில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் Dr.ஸ்ரீராஜசேகரம், காலஞ்சென்ற அரியசுகிர்தமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகிலவரதராணி, இந்திராணி, குமாரராஜன், நமஸ்கந்தராஜா, தேவிகாராணி, கிசோராணி, செந்தில்வேல்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பாலச்சந்திரன், செந்திலேஸ்வரன், செல்வமனோகரி, சிவகலா, குமணன், பவானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் முகுந்தா, வினோ, மதி, ஜனா, தனு, சுனோஜ், அசோக், பாபு, வாணி, தினேசன், துசி, சூரியா, வர்ணவி, மாதங்கி, ஆதித்தியன், அனடாயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.12.2002) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிட்டி போர்த,*
*வட்டுக்கோட்டை.* (C/25721)


தகவல்:
சி.குமாரராஜன் (மகன்)


DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்



DSI



பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES சுப்பர் சூஸ்
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (12134)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.